





# 2017

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
## ANNUAL PERFORMANCE REPORT









කම්කරු, වෘත්තීය සමිති සබඳතා හා සබරගමුව සංවර්ධන අමාත්‍යාංශය

தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

Ministry of Labour, Trade Union Relations and Sabaragamuwa Development

**தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு**

# ஆண்டு செயலாற்றுகை அறிக்கை 2017

**தொகுப்பு**
திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

**வெளியீடு**
தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2017

**தயாரிப்பு**
திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு

**பதிப்பகம்**
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

த.பெ 1519, 2வது மாடி,
தொழில் செயலகம், நாரயன்பிட, கொழும்பு 05.

அச்சிடல்:
பிரின்டெக் எஸ்டப்ளிஸ்மன்ட் தனியார் கம்பனி
52/1, எக்வத்த வீதி, மிரிகானை, நுகேகொடை - sales@printec.lk
**வலைத்தளம்** - www.printec.lk

Printed with VOC free, non toxic vegetable oil-based environmentally-friendly ink, on 100% recycled paper using wood free pulp which is made from 100% post consumer waste paper
(Paper recycling is the process of recovering waste paper and remarking it into new paper products.)

Recycling one ton of paper saves
17 mature trees, 26 m3 of water, 2.3 m3 of disposal space, 320 liters of oil, and 4,100 kilowatt-hours of electricity.

We encourage you to recycle this Document after use.

# தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

# ஆண்டு செயலாற்றுகை அறிக்கை - 2017

## பொருளடக்கம்


**பக்கம்**

- தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர் **கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன அவர்களின் செய்தி** iv
- தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் **இராஜாங்க அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களின் செய்தி** vi
- தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் செய்தி viii
- தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் செய்தி x
- அறிமுகம் 01

**அமைச்சின் செயலாற்றுகை** 05

I. நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு 05
II. நிதிப் பிரிவு 07
III. திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு 08
IV. தொழில் வெளிநாட்டு தொடர்புகள் பிரிவு 10
V. சப்பரகமுவ அபிவிருத்தி 11

**அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்** 12

I. தொழில் திணைக்களம் 12
II. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் 25
III. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 31
IV. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் 32
V. வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் 36
VI. சிரம வாசனா நிதியம் 38

**புகைப்படங்கள் - அமைச்சின் விசேட செயற்பாடுகள்** 40



## தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி **அமைச்சர் கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன அவர்களின் செய்தி**

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றங்களை மீளாய்கின்ற இந்த அமைச்சின் செயலாற்று அறிக்கைக்கு மிகவும் மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் இந்த செய்தியை வழங்குகின்றேன்.

தொழில் அமைச்சானது பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செலுத்துகின்ற அதேவேளையில் தொழிற்றுறை அமைதியைப் பேணுகின்ற பாரிய பொறுப்புக்கும் தோள்கொடுக்கின்றது. அமைச்சொன்றாக, வேலையாளர்களது உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதேவேளை அந்தப் பொறுப்பினை முத்தரப்பு உறவுமுறைகளினூடாக நிறைவேற்றுவதற்கு நாம் ஈடுபாட்டுடன் பங்களிப்புச் செய்கின்றோம்.

தனியார் துறையின் எட்டு மில்லியன் வேலையாளர்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்கின்றனர். இந்த அமைச்சின் முக்கிய செயற்பாடுகளிலொன்று இத்துறைக்கு தொழில் விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு பயனுறுதி வழங்குதல் மற்றும் கொள்கைகளை வகுத்தமைத்தலாகும். தொழிற்றுறைப் பிணக்குகள், பணிப் பகிஷ்கரிப்புக்களைக் குறைத்து, தொழிலணியின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்தி, ஒழுங்குவிதிகளை செயற்படுத்தி, வலுப்படுத்தி எமது அமைச்சின் பரப்பெல்லைக்குள் வருகின்ற இவற்றை பின்பற்றி நாட்டில் தொழிற்றுறை அமைதியைப் பேணுவதற்கு தொடர்ச்சியாக அரசின் தலையீட்டினை வழங்குகின்றோம். நாம், சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்களுடன் இணங்கிப்போவதை உறுதிப்படுத்துவற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளோம். இந்த அனைத்து முயற்சிகளிலும் தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆதரவு மிகவும் பராட்டுதலுக்குரியது.

இன்று பலமான தொழிற் சங்க இயக்கம் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. வேலையாளர்கள் பயவுணர்வின்றி தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொழிற் சங்கங்களில் இணைந்துகொள்வதற்கு அவர்களுக்கு இயலக்கூடிய சூழல் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் என்ற வகையில் ஆலோசனைகள் மற்றும் இணக்கப்பாடுகளினூடாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றோம். சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்காக சர்வதேச தொழில் தாபனத்தின் ஒத்துழைப்புடன்

நிகழ்ச்சித்திட்டமொன்றை நிறைவேற்றியுள்ளோம். அதன் பயனாக தேசிய கொள்கையொன்று தற்போது நடைமுறையிலிருக்கின்றது. அமைச்சின் குறிப்பிடத்தக்க வெற்றி, பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படியினை நிறைவேற்றியதனூடாக தனியார் துறைப் பணியாளர்களுக்கு 2,500/- ரூபா வேதன அதிகரிப்பினை வழங்கியமையாகும். தனியார் துறையில் ஆகக்குறைந்த தேசிய வேதனம் 10,000/- என்பதாக அதிகரித்தமை பிறிதொரு மைற் கல்லாகும். அமைச்சின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் நவீன வசதிகளுடன் கூடிய தொழில் அலுவலகங்கள் நிருமாணிக்கப்பட்டு, அதிகளவிலான பயனுள்ள சேவைகளுக்காக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசிய தொழில் ஆலோசனைச் சபையினைக் கூட்டி, தொழில் துறையினை முன்னேற்றுவதற்கான அதிகளவிலான செயற்பாடுகளை ஆரம்பிக்க முடிந்திருந்தது. இன்றைய தேவைப்பாடுகளுக்கு தொழில் சட்ட வாக்கங்களைப் பொருந்தச் செய்வதற்காக உரிய நேரத்தில் அவற்றிற்கான திருத்தங்களை மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சியை அமைப்பதில் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களாலும், பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களாலும் வழங்கப்பட்ட தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்கள் மிகவும் முக்கியமானவையாகும். இச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் தமது ஆதரவினை நல்கியிருந்த இராஜாங்க அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் மற்றும் பதவியினர் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன (பா.உ.)**
தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும்
சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர்



## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ. **ரவீந்திர சமரவீர அவர்களின் செய்தி**

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட செயலாற்றுகை அறிக்கை 2017 இற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதற்கான வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு நான் பெரு மகிழ்வடைகின்றேன்.

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு, 2017 ஆம் ஆண்டில் தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச துறையில் நாடளா வியரீதியில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் நலன்புரிக்காக அதிகளவிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அமைச்சுடன் இணைந்திருக்கின்ற நிறுவனங்களான தொழில் திணைக்களம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சிரம வாசனா நிதியம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் போன்றவற்றினால் நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு நிலையானவையாகும்.

தொழில் பிணக்கு மற்றும் பணிப் பகிஷ்கரிப்பிற்குத் தீர்வு காண்பதில் அமைச்சு தலையிட்டு அதனூடாக நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையினை விரவுபடுத்துவதற்கான தொழிற்றுறை அமைதியைத் தாபிக்கின்றது. சர்வதேச தொழில் நியமங்கள், வேலையாளர்களின் நிருவாகம் மற்றும் நலன்புரி என்பவை தொடர்பில் கொள்கைகளை வகுத்தமைத்து நடைமுறைப்படுத்துதல், தொழில் தொடர்புகள் குறித்த சட்டங்களை வரைதலும் அவற்றினை ஒழுங்குபடுத்துதலும் இந்த ஆய்வாண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தொழிற்சங்கங்களை பதிவு செய்வதற்கும், நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் அனைத்து அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்களும் ஈடுபடுவதற்குத் தேவையான செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மற்றும் தேசிய மனிதவள மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தொழில் பரிசோதனைகளை விரிவுபடுத்துதல், தொழில் பிணக்குகளுடன் தொடர்புபட்ட நீதிமன்ற வழக்குகள், தொழில் வாய்ப்பினை உருவாக்குதலும், ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும், தொழில் வழிகாட்டல், மனிதவலு நிரம்பல் மற்றும் அபிவிருத்தி மீது ஆய்வினை நடத்துதல், தொழில்வாய்ப்பு சேவை நிலையங்களை ஆரம்பிப்பதன் மூலம் தொழிலுக்கான வாய்ப்பு, மாவட்ட தொழிற் சந்தைகளை நடத்துதல் போன்றவை ஆய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கியமான செயற்பாடுகளாகும்.

இந்த அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக முற்சியெடுத்திருந்த தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.என்.ஏ.சரணதிஸ்ஸ அவர்களுக்கும், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளர் திரு.சுனில் அபயவர்தன அவர்களுக்கும், அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்களுக்கும், அவற்றின் பதவியினருக்கும் எனது பாராட்டுக்களைப் பதிவுசெய்துகொள்ள விரும்புகின்றேன்.

**ரவீந்திர சமரவீர (பா.உ.)**
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள்
இராஜாங்க அமைச்சர்



## தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி
## **அமைச்சுச் செயலாளரின் செய்தி**

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மீதான 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த அறிக்கைக்கு எனது நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொழில் உரிமைகளுக்காக அணிவகுத்து நின்ற இலங்கையின் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறப்புவாய்ந்த செயற்பாடுகளை நாம் மேற் கொண்டுள்ளோம் என்பதை மகிழ்வுடன் குறிப்பிடுகின்றோம். நல்லாட்சி கொள்கைகளின் கீழ் வேலையாளர் களின் உரிமைகளைப் பலப்படுத்துவதற்கு கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அத்துடன் 2020 மற்றும் 2025 தொலை நோக்கினையும், கொள்கைக் கட்டுக்கோப்பினையும் ஆரம்பிக்க இந்த அமைச்சிற்கு முடிந்திருந்தது.

தொழில்தருநர், பணியாளர் மற்றும் அரசாங்கம் ஆகிய முத்தரப்பு உறவுகளை நிருவகித்து, சப்பிரகமுவ மாகாணத்தின் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இந்த அமைச்சிற்கு உரித்தளிக்கப்பட்ட தலையாய பொறுப்பாகும். இந்தப் பணிப்பாணையை நிறைவேற்றுவதற்கு அமைச்சும், அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற தொழில் திணைக்களம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம், சிரம வாசனா நிதியம் மற்றும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் 2017 சனவரி முதல் டிசெம்பர் வரையான ஆய்வாண்டு காலப்பகுதியின்போது முக்கியமான பங்கினை வகித்திருந்தன.

தொழில் ஆலோசனைச் சபையை வலுப்படுத்துவதற்கும், ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், வேலையாளர் நட்டஈட்டுச் சட்டம், சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம் கடைகள் மற்றும் அலுவலக கட்டளைச்சட்டம் மற்றும் சிரம வாசனா நிதியச் சட்டம் ஆகியவற்றின் மேவுகையை விரிவுபடுத்தும் நோக்கில் இவற்றைத் திருத்து

வதற்கான செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதே போன்று, சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசிய கொள்கை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளதுடன், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு தேவைப்பட்டுள்ள சட்டக் கட்டுக்கோப்பினை மீள நடைமுறைப்படுத்த வதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அமைச்சானது, சர்வதேச தொழில் தாபனம் உள்ளடங்கலான சர்வசே தாபனங்களுடனும், ஏனைய நாடுகளுடனும் உறவுமுறையைப் பலப்படுத்துவற்கும், தொழில் உரிமைகளை நிலை நிறுத்துவதற்கான அதன் ஈடுபாட்டினூடாக பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமைத் திட்டத்தை (ஜீ.எஸ்.பீ) மீளப் பெறுவதற்கான அதன் முயற்சிகள் பற்றி திருப்தியாகவுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2018 ஆம் ஆண்டில் சப்பிரகமுவ மாகாணத்தில் விருத்திசெய்யப்படவுள்ள கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார செயற்பாடுகளுக்கு தேவையானவை இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட செயலகங்களுடான கலந்துரையாடலுடன் இனங்காணப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்டுள்ள தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு தலைமைத்துவத்தையும், வழிகாட்டலையும் வழங்கியிருந்த தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன அவர்களுக்கும், தொழில்,தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கின்றேன்.

இந்த அறிக்கையைத் தயாரித்திருந்த அமைச்சின் மேலதிக செயலாளருக்கும், அமைச்சின் ஒட்டுமொத்தப் பதவியினருக்கும், தொழில் ஆணையாளர் அதிபதி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் அதிபதி, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் , தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, சிரம வாசனா நிதியத்தின் முகாமையாளர் மற்றும் இந்த நிறுவனங்களின் அனைத்து மட்டங்களிலுமிருக்கின்ற அலுவலர்கள் அத்துடன் அமைச்சின் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் எனது நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

**எஸ்.ஏ. நிமல் சரணதிஸ்ஸ**
செயலாளர் தொழில்,தொழிற்சங்க உறவுகள் மற்றும்
சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு



## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க
## **அமைச்சுச் செயலாளரின் செய்தி**

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சினதும், அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற தொழில் திணைக்களம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம், சிரம வாசனா நிதியம் மற்றும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினதும் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை பற்றிய இந்த அறிக்கைக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள், சர்வதேச தொழில் தாபனம் உள்ளடங்கலாக ஏனைய நாடுகள், சர்வதேச அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுடன் உறவினைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரம்பித்தல், தொழில் களம் பற்றிய ஆய்வுகளை நடத்துதல், தொழில்தருநர், பணியாளர் மற்றும் அரசாங்கம் ஆகிய முத்தரப்பு உறவினை நிருவகிக்கும் நோக்கில் தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் ஈடுபாட்டுடனான பங்கேற்பினை மேம்படுத்துதல் மற்றும் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் பணித்தல் போன்றவையாகும்.

தொழில் திணைக்களமானது, வேலையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்குமிடையில் ஐக்கியத்தை மேம்படுத்துவதற்காக சமூக கலந்துரையாடல் நிகழ்சித்திட்டங்களை நடத்துதல், மாகாண தொழில் அலுவலகங்களுக்கு கட்டடங்களை வழங்குதல், “மெஹேவர பியஸ” அலுவலகக் கட்டடத்தொகுதி நிருமாணச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை ஆற்றியுள்ளது.

அதேபோன்று, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது, இளம் தொழில் நாடுநர்களுக்கு வழிகாட்டலை வழங்குவது மற்றும் சுயதொழிலுக்கான பயிற்சி ஏற்பாடு உள்ளடங்கலாக எண்ணிக்கையான முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. இச்செயற்பாடுகளுக்கு இசைவாக, அரச தொழில் சேவை நிலையங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 8 மாவட்டங்களில் திறக்கப்பட்டுமுள்ளன. பல இளம் ஆண்கள், பெண்கள் தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களை எடுப்பதற்கு வழிகாட்டும் வகையில் தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியுள்ளது.

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் கீழ், வேலையாட்களின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் மீது 22017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், வேலைத்தலங்களில் விபத்து ஏற்பட்ட வேலையாளர்களுக்கு நட்டஈட்டினைச் செலுத்துவதனைத் தொடர்ந்துள்ளதுடன், வேலைதல விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடாக தற்போது வழங்கப்பட்ட தொகையை அதிகரிப்பதற்கு சட்டவாக்கங்களை வகுத்தமைப்பதற்குரிய ஆரம்ப முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம், அரச, தனியார் துறை அலுவலர்களுக்கு குறுகிய கால, நீண்ட கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியுள்ளது. சிரம வாசனா நிதியம், தொழில் சமூகத்தின் சேமநலன் என்ற பரந்தளவிலான குறிக்கோளின் கீழ் குறைந்தளவு வருமானத்தை உழைக்கின்ற குடும்பங்களை உயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியுள்ளது.

எமது அனைத்து கடமைகளையும் பொறுப்புக்களை ஆற்றுவதற்கு பலமான தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் வழங்கியமைக்காக தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன அவர்களுக்கும், இராஜாங்க அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுனில் அபயவர்தன**
செயலாளர் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள்
இராஜாங்க அமைச்சு

01

# தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அமைச்சின் பிரதான குறிக்கோள்கள், இலங்கையின் பகுதியவிலான அரசாங்கத் துறை மற்றும் தனியார் துறை பணியாளர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சேவை நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் உற்பத்தியையும், தொழில் ஆக்கத்திறனையும் அதிகரிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற தொழிற்றுறை அமைதி மற்றும் தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்குமிடையில் சிறந்த தொடர்பினை உருவாக்குகின்ற கொள்கைகளை வகுத்தமைத்தல் அத்துடன் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் என்பவையாகும். இந்த அமைச்சிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் பரப்பானது, உழைக்கும் மக்களின் நலன்புரிக்காக காலத்திற்குக் காலம் வகுத்தமைக்கப்படுகின்ற தொழில் சட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுடன் பரந்துபட்டுக் காணப்படுகின்றது. இதன்படி, அமைச்சின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி பின்வருமாறு காணப்படுகின்றது.

## தொலைநோக்கு

"திருப்திமிகு உற்பத்திசார் தொழிலணி"

## செயற்பணி

"தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு, உச்ச மனிதவலு பயன்பாடு, உற்பத்தித்திறன் மற்றும் சீரிய வேலையினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை அடைவதனை நாடிய பங்களிப்பு"

**தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு**

- **தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ இராஜாங்க அமைச்சு**
- **அமைச்சு அலுவலகம்**
  - நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு
  - நிதிப் பிரிவு
  - திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
  - தொழில்,வெளிநாட்டுத் தொடர்புகள் பிரிவு
  - சப்பிரகமுவ அபிவிருத்திப் பிரிவு
- **தொழில் திணைக்களம்**
- **மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்**
- **தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்**
- **தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**
- **வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்**
- **சிரம வாசனா நிதியச் சபை**

## அமைச்சின் குறிக்கோள்கள்


- முத்தரப்பினைவலுப்படுத்துவதனூடாக தொழில்தருநர்கள், பணியாளர்களுக்கிடையிலான உறவினைப் பலப்படுத்துதல்.
- சர்வதேச நியமங்களுடன் இணங்குகின்ற சேவை நியமங்கள் மற்றும் வேலையாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துதல்.
- சிறுவரை மோசமான வகையில் வேலைக்கிடுதலை இல்லாதொழித்தல்.
- பெண் பணியாளர்களை வலுப்படுத்தலும் பாதுகாத்தலும் மற்றும் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவித்தல்.
- தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகளின் நெகிழ்வுப் போக்கினை அதிகரித்தல்.
- சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான உரிய முறையியலைத் தயாரித்தல்.

## அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள்

2015.09.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவாக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள், தத்துவங்கள் மற்றும் செயற்பணிகள் பின்வருமாறு:

1. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் விடயங்கள், அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள்,நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. சர்வதேச தொழில் தர நியமங்கள், பணியாளர்களை மேற்பார்வையிடுதல் மற்றும் நலன்புரி தொடர்பான கொள்கைகளை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
3. சர்வதேச தொழில் தாபனம் மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு அமைப்புகளுடன் இணங்கிச் செயற்படுதல். தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் ஏழு கூட்டங்கள் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்டிருந்தன.
4. ஊழியர் சேமலாப நிதியம், மற்றும் தனியார் ஓய்வூதியத் திட்டங்களை நிருவகித்தல்.
5. தொழிற்றுறை உறவுகள் மற்றும்தொழிற்றுறைப் பிணக்குகளை தீர்த்துவைத்தலும்
6. தொழில் உறவுகள் மற்றும் அவற்றின் ஒழுங்குவிதிகள் தொடர்பான சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் வகுத்தமைத்தல் தொடர்பான விடயங்கள்.
7. தொழில் மற்றும் தொழில் வழிகாட்டல் ஏற்பாடு.
8. நாட்டின் அபிவிருத்திக்காக தொழில் சங்கங்களை பதிவுசெய்தல் மற்றும் அரச, தனியார் துறைகளில் உள்ள சகல தொழிற்சங்கங்களினதும் நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக்கொள்ளத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதும், நடைமுறைப்படுத்துவதும்.
9. தேசிய மனித வலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.
10. தொழில் முகவர்கள் மூலமான வரிக் கட்டணத்தின் ஒழுங்கமைத்தல்.
11. தொழிலின்மை நன்மைக் காப்புறுதித் திட்டம்.
12. தொழில்சார் வழிகாட்டல் ஏற்பாடு.
13. தொழில் திணைக்களம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்,வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், சிரம வாசனா நிதியம் மற்றும் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்கள்.
14. தொழில் திணைக்களம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், சிரம வாசனா நிதியம் மற்றும் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பானகொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
15. சப்பிரகமுவ அபிவிருத்தி என்ற மேலதிக விடயத்தினால் 2017.06.09 ஆம் திகதியிடப்பட்ட 2022/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயற்பரப்பெல்லை மேலும் விரிவுபடுத்தப்பட்டிருந்தது.
    i. சப்பிரகமுவ மாகாணத்தில் விசேட கருத்திட்டங்களைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
    ii. சப்பிரகமுவ மாகாணத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

# நிறுவனத்தின் கட்டமைப்பு



## பதவியினர் பற்றிய தகவல்- 31.12.2017

| | நிறுவனம் | சிரேஷ்ட மட்டம் | | உயர் மட்டம் | | இரண்டாவது மட்டம் | | கீழ் மட்டம் | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட்ட எண்ணிக்கை | வேற்றிடங்களின் எண்ணிக்கை |
| 1 | அமைச்சு | 22 | 12 | 5 | 4 | 80 | 53 | 41 | 30 | 148 | 99 | 49 |
| 2 | தொழில் திணைக்களம் | 210 | 154 | 668 | 526 | 1,771 | 1,355 | 489 | 460 | 3,138 | 2,495 | 643 |
| 3 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 15 | 9 | 4 | 0 | 673 | 566 | 15 | 13 | 707 | 588 | 119 |
| 4 | தொழில் கற்கைகள் நிறுவகம் | 09 | 03 | 13 | 07 | 18 | 10 | 05 | 03 | 45 | 23 | 22 |
| 5 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 03 | 03 | 07 | 02 | 10 | 07 | 05 | 05 | 25 | 17 | 08 |
| 6 | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 04 | 03 | 03 | 02 | 31 | 22 | 05 | 03 | 43 | 30 | 13 |
| 7 | சிரம வாசனா நிதியம் | 01 | 01 | 02 | 02 | 08 | 08 | 04 | 04 | 15 | 15 | 0 |
| | **பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை** | **264** | **185** | **702** | **543** | **2,591** | **2,021** | **564** | **518** | **4,121** | **3,267** | **854** |

## நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதான சட்டவாக்கங்கள்

1. 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம்.
2. 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்க கட்டளைச் சட்டம்
3. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம்
4. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
5. 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்
6. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
7. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் (தொழில் மற்றும் வேதனங்கள் ஒழுங்குவிதி) சட்டம்
8. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துதல் சட்டம்
9. 1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கட்டணங்களை அறவிடும் தொழில் முகவர்கள் சட்டம்
10. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
11. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
12. 1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பணியாளர்கள் சபைச் சட்டம்
13. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம்
14. 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம்
15. 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டம்
16. 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டம்
17. 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வேலையாளர்களின் ஆகக்குறைந்த தேசிய சம்பளச் சட்டம்
18. 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

## நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு

நிருவாக அலகு, தாபன அலகு, மற்றும் ஊடக அலகு என்பன நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவிற்குள் உள்ளடக்கப்படுகின்றன. இந்தப் பிரிவிற்கு,பொது நிருவாகம், பெற்று வழங்கல் செயற்பாடுகள், முகாமைத்துவம், பராமரிப்புச் செயற்பாடுகள், பயிற்சி, தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் உள்ளடங்கலாக பல பொறுப்புக்கள் உரித்தளிக்கப்பட்டுள்ளன. அமைச்சினதும், அமைச்சு அலுவலகத்தினதும் மற்றும் பிரதி அமைச்சரின் அலுவலகத்தினதும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகள் தாபனப் பிரிவினால் ஆற்றப்படுகின்றன. அதேபோன்று தொழில் திணைக்களம்,வேலைவாய்ப்பு மற்றும் மனிதவலுத் திணைக்களம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், சிரம வாசனா நிதியச் சபை ஆகியவற்றின் மனிதவள முகாமைத்துவ மற்றும் நிருவாகம் தொடர்பான செயற்பாடுகள் இந்தப் பரிவினால் கையாளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, பாராளுமன்ற வினாக்கள், பொது மக்கள் மேன்முறையீட்டுக்குழு, ஆலோசனைக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொது மக்களுடன் தொடர்புபடுகின்றது.

### ■ மனித வளங்கள் அபிவிருத்தி

இந்த அமைச்சானது, அரச கரும மொழிகள் திணைக்களத்துடன் இணைந்து அமைச்சினதும், அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் பதவியினரின் தமிழ் மொழி ஆற்றலை செம்மைப்படுத்துவதற்காக தமிழ் மொழிப் பாடநெறிகளை ஒழுங்குபடுத்தியிருந்தது. இந்தப் பிரிவு, சேவையின் தேவை நிமித்தமான பட்டப் பிற்படிப்பு மற்றும் டிப்புளோமா பாடநெறிகளைப் பின்பற்றுவதற்காக அமைச்சினது அலுவலர்களுக்கு தேவையான நிதி உதவிகளையும், ஏனைய வசதிகளையும் வழங்குகின்றது. அமைச்சரின் அலுவலர்களும் இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் மற்றும் இலங்கை ஆதார மற்றும் ஆற்றல் அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றால் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தனர்.

தகவல் தொழில்நுட்பப் பாடநெறிகளைக் கற்றிருந்த பயிலுநர்கள் செய்முறைப் பயிற்சிக்காக அமைச்சின் பல்வேறு பிரிவுகளிலும் அமர்த்தப்பட்டிருந்தனர்.

2017.01.01 ஆம் திகதியிலிருந்து 2017.12.31 ஆம் திகதி வரைக்கும் அமைச்சின் பதவியணியிலிருந்து அலுவலர்கள் பல்வேறு பயிற்சிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

அமைச்சுப் பதவியினரின் ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக 05 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன், இதன்படி, நீண்ட கால ஆக்கத்திறன் முறைகளை இனங்கண்டு, நடைமுறைப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்காக ஆக்கத்திறன் சுற்றுக்கள் தாபிக்கப்பட்டிருந்தன.

### ■ ஏனைய விசேட செயற்பாடுகள்

**1980 யூலை வேலை நிறுத்தக்காரர்களுக்கான நிவாரண ஏற்பாடு**

1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியமைக்காக சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட 222 வேலையாளர்களின் பெயர்கள் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு 2016.01.01 இலிலிருந்து 2016.12.31 வரை பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு வேலையாளர்களுக்கும் 250,000 ரூபா வீதம் அவர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்குவதற்கு 55,500,000 ரூபா தொகை தேவைப்படுவதாக எதிர்பார்க்கப்படுகின்றது. 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி யமைக்காக சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட 155 வேலையாளர்களின் பெயர்கள் 2017.01.01 இலிருந்து 2017.12.31 வரை தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்குப் பரிந்துரை செய்யப் பட்டிருந்தது. ஒவ்வொரு வேலையாளர்களுக்கும் 250,000 ரூபா வீதம் அவர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்குவதற்கு 38,750,000 ரூபா தொகை தேவைப்படுவதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தமது தொழில்களை இழந்த துல்கிரிய மற்றும் பூகொட புடைவை ஆலைகளின் பணியாளர்களுக்கான நிவாரண ஏற்பாடு

தமது தொழில்களை இழந்த துல்கிரிய மற்றும் பூகொட புடைவை ஆலையின் 2396 வேலை யாளர்களுக்கு 2016 ஆம் ஆண்டில் 25,000 ரூபா இறுதி கருணைக்கொடை செலுத்தப்பட்டிருந்தது. தொடர்ந்து, வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியமைக்காக சேவையிலிருந்து நீக்கப்பட்ட துல்கிரிய மற்றும் பூகொட புடைவை ஆலையின் வேலையாளர்களுக்கு சேவைக் காலப்பகுதியின் அடிப்படையில் (1978 மார்ச் 18 இலிருந்து 2011 யூனில் புடைவைக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கபட்டது வரை) பணிக்கொடையொன்றினைச் செலுத்துவதற்கு 165.3 மில்லியன் ரூபாவினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கோரி அமைச்சரவை விஞ்ஞாபன மொன்று அமைச்சரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட முன்மொழிவினைத் தொடர்ந்து, 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்து சேவையிலிருந்து நீக்கப்பட்ட அரச மற்றும் தனியார் துறைகளின் பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவினைச் செலுத்துவது தொடர்பிலான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளின் மூலம் நிதி அமைச்சிற்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன்படி, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 1932 விண்ணப்பதாரிகள் யூலை வேலை நிறுத்தக்காரர்களின் படிக் கொடுப்பனவுக்காக பரிந்துரைக்கப்பட்டு நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன. 2017.01.01 ஆம் திகதியிலிருந்து 2017.12.31 ஆம் திகதி வரைக்கும் யூலை வேலை நிறுத்தக்காரர்கள் 155 பேர் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திடம் கொடுப்பனவிற்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்தனர். ஆகவே மொத்தம் 2087 யூலை வேலை நிறுத்தக்காரர்கள் 2017.10.10 ஆம் திகதியளவில் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

## பொது மக்களின் முறைப்பாடுகள்

அரச துறைப் பணியாளர்களின் தொழில்வாய்ப்பு தொடர்பில் இந்த ஆண்டில் 364 முறைப்பாட்டுக் கடிதங்கள் தொழில் அமைச்சினால் பெறப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வினை வழங்கும் நோக்கில் அமைச்சின் அதிகாரத்திற்குள் வருகின்ற நிறுவனங்களுக்கு அவை அனுப்பப்பட்டிருந்தன.

“சனாதிபதிக்குத் தெரிவித்தல்” என்று தலைப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2017.01.01 இலிருந்து 2017.12.31 வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட மொத்தஎண்ணிக்கையான 1437 முறைப்பாடுகளில் 988 தீர்க்கப்பட்டுள்ளன.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் அலுவர் ஒருவர் மற்றும் மேன்முறையீட்டு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பிரசைகளின் வேண்டுகோளிற்கேற்ப தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

### தொழில்நுட்ப தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவின் முன்னேற்றம்

தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காக தொழில்நுட்பத் தகவல் மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பு தரமுயர்த்தப்படுகின்றது.

- அதிகரித்துள்ள தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டுக்காக உட்கட்டமைப்பு வசதிகளைச் செம்மைப்படுத்துவதன் கீழ் இணைய வசதிகளை ஒழுங்கமைப்பதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட அச்சுறுத்தல் முகாமைத்துவ முறைமையொன்றினைப் பெறுதல்.
- அமைச்சின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தகவல் தொழில்நுட்பத்தைக் கையாள்வதற்காக அதிக கொள்ளளவினைக் கொண்டுள்ள கணினிகளைக் கொள்வனவு செய்தலும் அத்துடன் மென்பொருளை உட்செலுத்துதலும் (விண்டோர்ஸ் 2016 ஜெனீயூன்).
- பணியாளர்கள் பணியில் திருப்தியடைவதற்காக மென்பொருளை அறிமுகப்படுத்துதல்
    - கடித முகாமைத்துவ முறைமை
    - வாகன முகாமைத்துவ முறைமை

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட வசதிகளின் முன்னேற்றமானது, வேலையாளர்களின் வசதி மற்றும் பணியில் திருப்தியினை அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிதிப் பிரிவு

**2017 சனவரி முதல் செப்ரெம்பர் 30 வரையான நிதிச் செயலாற்றுகை**

| நிகழ்சித்-திட்டம் | கருத்திட்டம் | செலவினத்தின் வகை | தேறிய ஒதுக்கீடு (ரூபா) | செலவினம் (ரூபா) | நிலுவை (ரூபா) | செலவீனம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | மீண்டெழுவது | 26,080,870 | 25,557,218 | 523,652 | 98.0 |
| | | மூலதனம் | 2,646,800 | 1,255,936 | 1,390,864 | 47.5 |
| | | மொத்தம் | 28,727,670 | 26,813,154 | 1,914,516 | 93.3 |
| 1 | 2 | மீண்டெழுவது | 79,145,630 | 78,625,542 | 520,088 | 99.3 |
| | | மூலதனம் | 40,033,400 | 24,348,918 | 15,684,482 | 60.8 |
| | | மொத்தம் | 119,179,030 | 102,974,460 | 16,204,570 | 86.4 |
| 1 | 11 | மீண்டெழுவது | 24,856,000 | 24,264,949 | 591,051 | 97.6 |
| | | மூலதனம் | 2,700,000 | 1,405,272 | 1,294,728 | 52.0 |
| | | மொத்தம் | 27,556,000 | 25,670,221 | 1,885,779 | 93.2 |
| 2 | 4 | மீண்டெழுவது | 50,588,200 | 50,102,148 | 486,052 | 99.0 |
| | | மூலதனம் | 1,074,700 | 136,169 | 938,531 | 12.7 |
| | | மொத்தம் | 51,662,900 | 50,238,317 | 1,424,583 | 97.2 |
| 2 | 5 | மீண்டெழுவது | 29,388,000 | 28,871,448 | 516,552 | 98.2 |
| | | மூலதனம் | 1,265,000 | 1,096,427 | 168,573 | 86.7 |
| | | மொத்தம் | 30,653,000 | 29,967,875 | 685,125 | 97.8 |
| 2 | 6 | மீண்டெழுவது | 9,900,000 | - | 9,900,000 | 0.0 |
| | | மூலதனம் | 3,500,000 | 1,450,163 | 2,049,837 | 41.4 |
| | | மொத்தம் | 13,400,000 | 1,450,163 | 11,949,837 | 10.8 |
| 2 | 3(2) | மீண்டெழுவது | 12,000,000 | 12,000,000 | - | 100.0 |
| | | மூலதனம் | 3,000,000 | 3,000,000 | - | 100.0 |
| | | மொத்தம் | 15,000,000 | 15,000,000 | - | 100.0 |
| 2 | 3(3) | மீண்டெழுவது | 3,200,000 | 3,200,000 | - | 100.0 |
| | | மூலதனம் | 2,000,000 | 1,969,682 | 30,318 | 98.5 |
| | | மொத்தம் | 5,200,000 | 5,169,682 | 30,318 | 99.4 |
| | மொத்தத் தொகை | மீண்டெழுவது | 235,158,700 | 222,621,305 | 12,537,395 | 94.7 |
| | | மூலதனம் | 56,219,900 | 34,662,567 | 21,557,333 | 61.7 |
| | | மொத்தம் | 291,378,600 | 257,283,872 | 34,094,728 | 88.3 |

இந்தப் பிரிவு, ஒதுக்கீட்டுக் கணக்குகள், அரச அலுவலர்களின் “பி” முற்பணக் கணக்கு, பொது வைப்புக் கணக்கு என்பவற்றை உரியமுறையில் சமர்ப்பித்துள்ளது.

### 2017 ஆம் ஆண்டுக்குத் தேவைப்படுத்துகின்ற வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு

| | மீண்டெழுவது (ரூபா 000`) | மூலதனம் (ரூபா 000`) | மொத்தம் (ரூபா 000`) |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 128,030 | 251,270 | 379,300 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 130,121 | 516,810 | 646,931 |
| மொத்தம் | **258,151** | **768,080** | **1,026,231** |

## திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான திட்டங்களை சரியான இலக்குகளை நோக்கித் தயாரித்தல், இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, முன்னேற்ற மீளாய்வு மற்றும் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல். இதற்கு மேலதிகமாக பின்வருகின்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1. அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களால் ஆற்றப்படுகின்றஅபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கியிருக்கின்ற வருடாந்த செயற்றிட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இத்திட்டங்களை உரிய தரப்பினருக்குப் பணித்தல்.
   - வரவுசெலவுத்திட்ட அடிப்படையிலற்ற வருடாந்த செயற்றிட்டத்தைத் தயாரித்து, நடைமுறைப்படுத்தி அதனூடாக மாதாந்த முன்னேற்ற மீளாய்வுகளை நடத்துதல்
2. 2017.06.09 ஆம் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானியைத் தொடர்ந்து தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் விடயத்திற்கு மேலதிகமாக சப்பிரகமுவ அபிவிருத்தி விடயமும் மேலதிகமாகியதைத் தொடர்ந்து இந்த அமைச்சின் பரப்பெல்லை விரிவடைந்திருந்தது. புதிய பிரிவிற்குரிய பதவியினருக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அதற்காக ஒதுக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் செலவினைப் பெறுவதற்கு பாராளுமன்ற ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது. இதற்குமேலதிகமாக, கைவிடப்பட்ட பிரதேசங்கள் மீது விசேட அழுத்தம் கொடுத்து இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட செயலகங்களுடன் கலந்தாலோசித்ததன் பின்னர் சப்பிரகமுவ மாகாணத்திற்காக அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.
3. 2015ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவு நியதிகளின்படி சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ, கண்காணிப்புத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுகை அறிக்கைகளை மாதாந்தம் மற்றும் காலாண்டில் சமர்ப்பித்தல்
4. வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதத்திற்காக பாராளுமன்றத்தில் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
5. 2017 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
6. இலங்கை தொழில் செய்திமடலைப் பிரசுரிப்பது தொடர்பிலான அனைத்துச் செயற்பாடுகளையும் கையாளுதல்.
   - கீழே மீளாயப்பட்டுள்ள காலப்பகுதி தொடர்பில் தொடர் இல.67 இன் தொகுதி 4, மற்றும் தொகுதி 1 காலாண்டின் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ளது.
7. ஆண்டிற்கு இருமுறை வெளிவருகின்ற செய்தித்தாள் “லேபர் ஜ” யினது தொடர் 01 இன் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதி வெளியிடப்பட்டுள்ளதுடன், தொடர் 02 இன் முதலாவது தொகுதி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.
8. சீரிய வேலை தொடர்பில் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துதலும், அதன் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களை நடத்துதலும். சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 9.945 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

| கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தகின்ற முகவர்கள் | ஒதுக்கீடுகள் (ரூபா. மில்.) | 2017.12.31 இலுள்ளவாறான முன்ரேற்றம் |
|---|---|---|
| 1. தொழில் திணைக்களம் | 5.825 | 5.278 |
| 2. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 2.000 | 1.940 |
| 3. தொழில் அமைச்சு | 2.120 | .582 |
| | **9.945** | **7.800** |

9. தொழில் துறை பற்றிய ஆராய்ச்சித் தாள்கள் கோரப்பட்டு,அவற்றில் சிறந்த 05 இனைத் தெரிவுசெய்து, 2017 நவம்பர் மாதம் 30 ஆம் திகதியில் புலமைசார் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளதுடன், அறிக்கைகளின் சுருக்கங்களை தயாரிப்பதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன், நாளேடொன்றாக அவற்றைப் பிரசுரித்தல்.
10. தொழில் நியாயாதிக்கசபைகளில் சேவையாற்றுகின்ற நடுத்தீர்ப்பாளர்கள், தொழிற்றுறை தொடர்புகளுடன் இணைந்துள்ள மற்றும் தொழில் திணைக்களத்தினால் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு 2017.12.21 ஆம் திகதி கொழும்பில் பயிற்சிப்பட்டறையொன்று நடத்தப்பட்டிருந்தது. தொழில் நியாயாதிக்கசபைகளின் போக்கினையும், அண்மைய தீர்ப்புகளைப் புரிந்துகொள்வதனூடாக நடுத்தீர்ப்பாளர்கள் மற்றும் அலுவலர்களின் அறிவாற்றலை மேம்படுத்துதல் மற்றும் அதிகரிப்பதற்கு அது சேவையாற்றியுள்ளது. இதன்விளைவாக நடுத்தீர்ப்புச் செயற்பாடுகள் மேலும் பயனுறுதி வாய்ந்ததாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் வரும்.
11. தொழில் துறை, தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு, இந்த அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் இலங்கையின் தொழில் துறை பற்றிய சுருக்கமான தகவல்களைக் கொண்டிருக்கின்ற “Sri Lanka Labour - Way Forward” என்று தலைப்பிடப்பட்ட வெளியீடொன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம், உள்நாட்டிலும், சர்வதேசரீதியிலும் நடத்தப்படுகின்ற விசேட கூட்டங்களில் பயன்படுத்தப்படக்கூடியது.
13. அம்பாறையில் சுற்றுலா பங்களாவின் நிருமாண நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பீட்டுத் தொகை 25 மில்லியனாகும்.
14. சனாதிபதி செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய உணவுஉற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017இற்கு ஒத்திசைவாக தொழில் அமைச்சினதும் திணைக்களத்தினதும் அலுவலர்களுக்காக 2017.10.06 ஆம் திகதி ‘உள்நாட்டு உணவும் போஷாக்கும்’ மற்றும் ‘வீட்டுத் தோட்ட வளர்ப்பு’ என்ற தலைப்புகளில் விரிவுரைகள் நடத்தப்பட்டிருந்தன. நிகழ்ச்சித்திட்டத்தின் போது பங்குபற்றிய அலுவலர்களுக்கு கமத்தொழில் திணைக்களத்தினால் மரக்கறி விதைகள் விநியோகிக்கப்பட்டன.

## நிலையான அபிவிருத்தி இலக்குகள்

இலங்கை, 2030 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் மூலம் சிறந்த அபிவிருத்தி நிலையை அடைவதற்கு எதிர்பார்க்கின்றது. இந்த அமைச்சானது, நிலையான அபிவிருத்தி இலக்கு 08 இனை அதாவது, உறுதியான, நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் அனைவருக்கும் பொருத்தமான ஆக்கத்திறனுள்ள தொழில் மற்றும் சீரிய வேலையை மேம்படுத்துதலை அடைவதற்கு பங்களிப்புச் செய்வதற்கு தேவைப்படுகின்றது. நாடாளாவிய சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம் 2013-2017, சர்வதேச தொழில் தாபனத்தின் ஒருங்கிணைப்புடன், அனைவருக்கும் சீரிய வேலை, சமூகக் கலந்துரையாடல், சமூகப் பாதுகாப்பு மற்றும் வருமானத்தை உருவாக்குதல் போன்றவற்றை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.
பிரதான கருத்திட்டங்கள் சர்வதேச தொழில் தாபனத்தின் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டிருந்தன.

1. உள்நாட்டு பொருளாதார அபிவிருத்திக்கான திறன்கள்
அம்பாறை, மட்டக்களப்ப, மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட சமூகங்களுக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சியினையளித்தல் வசதிகளை வழங்குதல் மற்றும் அரச தொழில் சேவை நிலையங்களை விருத்தி செய்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் நடத்தப்பட்டிருந்தது.

2. சர்வதேச தொழில் தாபனத்தின் இலங்கையில் சிறுவர் தொழிலைக் குறைப்பதற்கு நாடளாவியரீதியில் ஈடுபடுதல் மற்றும் உதவுதல் ∴ ஒத்துழைத்தில் கருத்திட்டம்
இலங்கையில் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. வீட்டு வேளையில் சிறுவர்களை அமர்த்துதல் மீது பரிந்துரைகளை வழங்குதல், தொழில் பரிசோதனை முறைமை விண்ணப்பத்தை அறிமுகப்படுத்துதல், சிறுவர் தொழிலை இல்லா தொழிப்பதற்கான கொள்கையொன்றை அங்குரார்ப்பணம் செய்தல், சிறுவர் செயற்பாட்டு கணக் கெடுப்பினை நடத்தியமை போன்றவை இந்தக் கருத்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3. டுநுநுனு.∴நுபுடுசு கருத்திட்டம்
இந்தக் கருத்திட்டம், இலங்கையிலுள்ள வறிய மக்களுக்கும், வடக்கு, வட மத்தி மற்றும் ஏனைய மாவட்டங்களிலுமிருக்கின்ற பெறுமதிமிக்க சமூகங்களுக்கும் சீரிய வேலையை உருவாக்கு வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் கருத்திட்டத்தினால், பழங்கள், மரக்கறி விவசாயத்திற்கிடையில் தொடர்பினை விருத்தி செய்தல், மீன்பிடி உற்பத்திகளை அதிகரித்தல், கிராமிய, பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் இணைந்த வியாபாரத்தை உருவாக்குதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தொழில் திணைக்களம், அனைவருக்கும் சீரிய வேலை என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் தனது அனைத்துக் கடமைகளையும் ஆற்றுவதுடன், நாட்டில் தொழிற்றுறை அமைதியையும் தாபிக்கின்றது. அதே நேரத்தில், அமைச்சுடன் இணைந்துள்ள ஏனைய நிறுவனங்களும், அனைவருக்கும் சீரிய வேலை என்பதை உறுதிப்படுத்தும்

நோக்கில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஆற்றுவதுடன், தொழில் துறை பற்றிய ஆராய்ச்சிகளையும், ஆய்வுகளை நடத்துவதுடன், தொழில் வர்க்கத்தில் நலன்புரியினை அதிகரிப்பதுடன், தொழில்தருநர் மற்றும் பணியாளரிடையிலான உறவினைப் பலப்படுத்தி, அறிவுசார்ந்த தொழில் அணியினை உருவாக்குவதில் தமது கடமைகளை ஆற்றுகின்றன.

## தொழில், வெளிநாட்டு நொடர்புகள் பிரிவு

சர்வதேச தொழில் தாபனத்தின் உறுப்பு நாடாக, இலங்கையால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கடப்பாடுகளுக்கமைவாக உள்நாட்டு தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, ஏனைய சமவாயங்கள் மற்றும் விதப்புரைகளை சர்வதேசரீதியில் அங்கீகரித்து தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் சார்பாக தொழில் துறையிலிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு இவற்றைப் பயன்படுத்துதல் இந்தப் பிரிவின் முதன்மையான கடமையாகும்.

### குறிக்கோள்கள்

- உலகமயமாக்கம் மற்றும் திறந்த பொருளாதாரத்தின் காரணமாக நிலையான அச்சுறுத்தலின் கீழ் வருகின்ற வேலையாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்தும் நோக்கில் தொழில்தருநர்கள் மற்றம் பணியாளர்களுக்கிடையிலான சிறந்த உறவினைத் தாபிப்பதில் நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கையால் எற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில் சமவாயங்கள் மற்றும் இலங்கையால் எற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில் சமவாயங்களை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றங்கள் பற்றியும் குறித்த நேரக்கட்டமைப்பிற்குள் சர்வதேச தொழில் தாபனத்திற்கு அறிவித்தல்.
- தொழில் துறை தொடர்பில் இலங்கையால் அடையப்பெற்ற முன்னேற்றங்களின் அடிப்படையில் சர்வதேச தொழில் சமூகத்திற்குக் கற்பிப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தல்.
- தொழில் துறையுடன் தொடர்புபட்டுள்ள பிரச்சினைகளைத் தெரியப்படுத்துவதற்கு சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி மற்றும் தொழில்நுணுக்க ஆதரவினைப் பட்டியலிடுதலை மேற்கொள்ளுதல்.
- அமைச்சினதும், அதன் அதிகாரத்தின் கீழ்வருகின்ற நிறுவனங்களுக்கும் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் வெளிநாட்டுப் பயிற்சி ஏற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுத்தல்.
- புதிய சட்டவாக்கங்களை வலுப்படுத்துதல் மற்றும் தற்போதைய போக்குகளுடன் ஒத்துப்போகும் வகையில் தற்போதிருக்கின்ற தொழில் சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 2017 சனவரி 01 இலிருந்து 2017 டிசெம்பர் 31 வரையான செயலாற்றுகைகள்

1. சர்வதேச தொழில் தாபன யாப்பின் 22 ஆம் பிரிவின் நியதிகளின்படி வருடாந்தம் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற அறிக்கைகளைத் தொகுத்தல், 2017 ஆம் ஆண்டுக்கான 06 சமவாயங்கள் தொடர்பிலான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் யாப்பின் 19 ஆம் இலக்கத்தின் கீழ் அனுப்புவதற்கு தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையைத் தயாரித்தல்.
2. ஜெனிவாவில் வருடாந்தம் இடம்பெறுகின்ற சர்வதேச தொழில் மாநாட்டுக்கான பிரதிநிதி களான முத்தரப்பின் பங்கேற்புடன் தொடர்புபட்ட அனைத்து ஒருங்கிணைப்பு மற்றும் பின்னர் தொடருகின்ற செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.
3. முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் மாதாந்தம் கூடுகின்ற தேசிய தொழில் ஆலோசனைச் சபைக் கூட்டத்தின் ஒழுங்குபடுத்துநராக செயற்படுதல்.
4. ஐரோப்பிய யூனியனின் ஜீ.எஸ்.பீ சலுகைகள் மீளப்பெறுவதுடன் இணைந்துள்ள பிரச்சனை களைத் தீர்ப்பது தொடர்பான அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் தொடர்புபட்டுள்ள விடயங்களை தொடர்ச்சியாக அவதானித்தல் (உப குழுக் கூட்டங்களில் பிரதிநிதித்துவப் படுத்துதல்)
5. இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதனையும், பாதுகாப்பதனையும் இலக்காகக்கொண்டு தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் பற்றிய அறிக்கைகளைத் தொகுத்தல்.
6. இந்த அமைச்சினதும், தொழில் திணைக்களத்தினதும் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அலுவலர்கள், வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். 2017 சனவரி 01 முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி காலப்பகுதியில் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் 50 அலுவலர்கள் பங்கேற்றிருந்தனர்.
7. இலங்கை மத்திய வங்கியினால் வருடாந்தம் பிரசுரிக்கப்படுகின்ற பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய பிரிவுகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி கண்ணோட்டம் மீதான அறிக்கைக்குரிய தகவல்களை வழங்குதல்.
8. தொழில் சட்டவாக்கங்களின் திருத்தம் மீதான முத்தரப்புக் குழுக்கூட்டங்களை நடத்துதல் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்தல்.

9. இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் தொழில் துறை தொடர்பான சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளில் எதிர்காலத்தில் ஒப்பமிடவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான செயற்பாடுகளைக் கையாளுதல்.
10. தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் மீதான திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்கான விசேட குழுவான தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள்மீதான தேசிய தொழிற்பாட்டுக் குழுவின் கூட்டங்களை நடத்துதல்.
11. சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்காக வகுத்தமைக்கப்பட்ட தேசிய கொள்கையை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் உருவாக்குதல்.
12. சிறுவர் தொழில் தேசிய செயற் குழுவின் கூட்டங்களை நடத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.
13. தொழில் துறை தொடர்பில் அமெரிக்க தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை களுக்கு பதில்களை வழங்குதல்.
14. வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களின் பயன்பாட்டிற்காக தொழில் துறையின் நடைமுறைப் போக்கு பற்றிய அறிக்கைகளைத் தொகுத்தல்.
15. தொழில் துறையில் ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதற்கு பொறுப்பெற்றுக்கொண்ட வெளிநாட்டு சுற்றுலா தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.
16. சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுணுக்க ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் தொடர்பான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
17. சர்வதேச தொழில் தாபனத்தின் கடல்சார் தொழில் சமவாயம் 2006 மற்றும் மாலுமிகளின் அடையாள ஆவண சமவாயம், 2003, இல.185 ஆகியவற்றை ஏற்று அங்கீகரிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகள்.

## சப்பிரகமுவ அபிவிருத்திப் பிரிவு

தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் விடயங்களுக்கு மேலதிகமாக, அமைச்சின் விடயப் பரப்பானது, சப்பிரகமுவ மாகாணத்தில் விசேட கருத்திட்டங்களை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றினை உள்ளடக்குவதனூடாக 2017.06.09 ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் விரிவாக்கப்பட்டிருந்தது. இந்தச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் "சப்பிரகமுவ அபிவிருத்தி செயலகம்" என்பதனைத் தாபிப்பதற்கான ஆரம்ப வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயலகத்திற்கான பதவியினர் உரிய அனுமதியினைப் பெற்றதனைத் தொடர்ந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளினூடாக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்காக இனங்காணப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படு வதற்காக அட்டவணைப்படுத்தப்படுகின்றன. இதன்படி, ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமொன்று 2017-20120 காலப்பகுதியில் சப்பிரகமுவ மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படாத அபிவிருத்திச் செயற்பாடுகளை இத்துடன் ஒருங்கிணைத்து வகுத்தமைக்கப்பட்டுள்ளது.

02

# தொழில் திணைக்களம்

1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவுக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக ஆரம்பிக்கப்பட்டிருந்த தொழில் திணைக்களமானது நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினை முன்னேற்று வதற்கு நாட்டிலிருக்கின்ற மிகவும் முக்கியமான அமைப்பாகும். தொழில் திணைக்களத்தின் அடிப்படை வகிபாகம், நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்புச்செய்கின்ற, தொழிற்றுறை அமைதியைப் பேணி தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துகின்ற தனியார் மற்றும் பகுதி யளவிலான அரச துறைகளின் தொழிலணியின் வேதனங்கள், சேவை நிலைமைகள், தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சேமநலன் தொடர்பான சட்டவாக்கங்களை வரைதலும், நடைமுறைப்படுத்துதலும் ஆகும்.

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள 13 பிரதான பிரிவுகள் நாடுபூராகவும் பரவியுள்ள வேலையாளர்களின் தேவைகளைத் தெரியப்படுத்துவதற்கு பல்வகைப்பட்ட சேவைகளை ஆற்றுவதற்காக தொழிற்பாட்டிலிருக்கின்றன. இதற்கு மேலதிகமாக, வேலையாளர் களுக்கு சட்டப் பாதுகாப்பினையும் சேமநலனையும் வழங்கி அவர்களது வேலைத் தளங்களில் பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக 11 வலய தொழில் அலுவலகங்கள், 40 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் தொழிற்படுகின்றன. 2017 டிசெம்பர் 31 இலுள்ளவாறு திணைக்களத்தின் ஒட்டுமொத்த பதவியனர் 2495 ஆகும்.

### தொலை நோக்கு

சர்வதேசரீதியில் போட்டிப் பொருளாதாரத்திற்காக தொழிற்றுறை அமைதியைத் தாபித்துள்ள நாடொன்று.


### செயற்பணி

தொழிற்றுறை அமைதியை உறுதிப்படுத்துகின்ற சீரிய வேலைச் சூழலொன்றைத் தாபிப்பதனூடாக இலங்கையின் அபிவிருத்தி செயல்முறையினை நோக்கிப் பங்களிப்புச் செய்தல்.

### தொழிற்பாடுகள்

- நாட்டில் தொழில் அமைதியைப் பேணுவதற்கு தொழில் சட்டங்களை வினைப்படுத்துவதனூடாக கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.
- தொழில் சட்டங்கள் தொடர்பாக உழைக்கும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் நாட்டில் தொழிற்றுறை அமைதியைத் தாபிப்பதற்கு சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துதல்.
- வியாபாரங்களுடன் தொடர்புபட்ட தொழில் நியமங்களை நடைமுறைப்படுத்துதல், புதிய வியாபாரங்கள் தொடர்பில் கணக்கெடுப்பினை நடத்துதல் மற்றும் அந்த வியாபாரங்களுக்கு சர்வதேச நியமங்களுக்கமைவாக நியமங்களை உருவாக்குதல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துதல், அதன் நன்மைகளை உறுப்பினர்களுக்கு வழங்குதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுதல்.
- தொழிலிலுள்ள சிறுவர், பெண்கள் மற்றும் இளம் நபர்களைப் பாதுகாப்பதற்கு உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தொழிற்றுறையில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய முறைகளை அறிமுகப்படுத்துதலும், விழிப்புணர்வினை ஏற்படுத்துதலும், இதனை மேற்பார்வையிடுதலும்.


## திணைக்கஷந்திஷ் நிறுவனக் கட்டமைப்பு



## தொழில் பரிசோதனைகள்

சர்வதேச போட்டியில் உள்நாட்டு உற்பத்திப்பொருட்களைப் பாதுகாக்கின்ற அதேவேளையில் தேசிய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான முக்கிய பிரிவுகளாக வேலைத்தலக் கூட்டுறவு மற்றும் தொழிற்றுறை அமைதி ஆகியன விளங்ககின்றன. இதன் முடிவினை நோக்கி தொழில் பரிசோதனைகள் பாரிய பங்கினை வகிக்கின்றன. தொழில் பரிசோதனைகளின் முறையான செயல்முறை, வேலைத்தல விபத்துக்களைக் குறைப்பதில், குறித்த வேதன அளவுத்திட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்துவதில் மற்றும் சிரமமற்ற ஓய்வூதிய வாழ்க்கையை உத்தவாதமளிக்கின்ற சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவுவதில் மற்றும் தொழிற்றுறை அமைதியைத் தாபிப்பதில் பங்களிப்புச் செய்கின்றது.

பின்வருகின்ற வரைபு, கடந்த 5 ஆண்டுகளாக திணைக்களத்தின் அலுவலர்களால் நாடளாவியரீதியில் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகளைக் காட்டுகின்றது. அதிகளவிலான தொழில் அலுவலர்களின் வெற்றிடங்களைக் கொண்டிருந்து நடத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கையில் சிறியளவில் பின்னடைவினைக் காணக்கூடியதாக இருந்துள்ளது. ஆனால், 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 179 புதிய அலுவலர்கள் ஆட்சேர்ப்பும், அவர்களது சேவையை உச்சளவில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், எதிர்வருகின்ற ஆண்டுகளில் அளவிலும், தரத்திலும் தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.




குறிப்பு: மாற்றத்திற்கமைவாக, வரைபு 2017 ஆம் ஆண்டுக்காக தற்போது கிடைக்கப் பெறுகின்ற தகவலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

## விசேட புலன்விசாரணைகள்


வழமையான தொழில் பரிசோதனைகள் மற்றும் முறைப்பாடுகளை விசாரித்தல் போன்றவற்றிற்கு மேலதிகமாக, திணைக்களம், தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை விரைவாக வலுப்படுத்துவதற்கும், அவசரமான பரிசோதனைகளையும் விசேட விசாரணைகளையும் நடத்துவதற்காக விசேட பிரிவொன்றைத் தாபித்துள்ளது.

இதன்படி, திணைக்களத்தில் அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகளில் 420 விசாரணைகளை நடத்தியுள்ளதுடன், நிலுவைப் பெறுமதி 198,184,397.89 ரூபா என்று கணிக்கப்பட்டுள்ளது.


இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற ஆலோசனைக் குழு, பொது முறையீட்டுக் குழு, சனாதிபதி செயலகம் மற்றும் பிரதம மந்திரியின் அலுவலகம் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் 52 விசாரணைகள் நடத்தப்பட்டன. ஆய்வாண்டு காலப்பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட பதவியணியைக் கொண்ட 16 நிறுவனங்கள் பரிசோதிக்கப்படடிருந்தன.

## தொழில் பிணக்குகளுக்கான தீர்வுகள்

தொழில் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேறுவகையான நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில் உதவியுள்ளதுடன்,தொழில் பரிசோதனைகள் காரணமாக பிணக்குகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் ஊடகத்தினூடாக திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழச்சித்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டிருந்தன.




குறிப்பு: 2017 ஆம் ஆண்டுக்காக கிடைக்கப்பெற்ற தற்போதைய தகவலின்படி தயாரிக்கப்பட்ட வரைபடம் மாற்றத்திற்கு அமைவானது




குறிப்பு: 2017 ஆம் ஆண்டுக்காக கிடைக்கப்பெற்ற தற்போதைய தகவலின்படி தயாரிக்கப்பட்ட வரைபடம் மாற்றத்திற்கு அமைவானது

## கூட்டு உடன்படிக்கைகளின் பதிவு

கூட்டு உடன்படிக்கைகள், தொழில் சட்டவாக்கங்களினூடாக அளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளிலும் பார்க்க சிறந்த சிறப்புரிமைகளைப் பெறுவதற்கு பணியாளர்களை இயலச் செய்கின்றன.

## தொழில் நியாயாதிக்கச் செயற்பாடுகள்

| | |
|---|---|
| கட்டாய நடுத்தீர்ப்புகளுக்காக அனுப்பப்பட்டவற்றின் எண்ணிக்கை | 42 |
| வழங்கப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை | 48 |

## தொழிற்சங்க செயற்பாடுகள்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில்பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் / சமாஜங்களின் எண்ணிக்கை 115 என்பதுடன் இரத்துச் செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் / சமாஜங்களின் எண்ணிக்கை 85 ஆகும். இதன்படி, 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்குகின்ற தொழிற் சங்கங்கள் / சமாஜங்களின் எண்ணிக்கை 1815 ஆகவிருந்தது.

## தொழில் முடிவுறுத்தல்

நடுத்தீர்ப்பினை மற்றும் நியாயமற்ற தொழில் முடிவுறுத்தலைக் குறைப்பதனுடன் இணைந்த, நிலைமை மாற்றங்களினால் ஏற்பட்ட விளைவினைக் கவனத்தில்கொண்டு பணி முடிவுறுத்தப்பட்ட பணியாளர்களுக்கு சமமான, நியமான நிவாரணத்தை வழங்கி, பொருளாதார வளர்ச்சியுடன் ஒருங்கிசைவாக தமது வர்த்தகத்தைப் பலப்படுத்துவதற்கு கைக்கொள்ளப்பட்ட திறமுறைகளின் விளைவாக வர்த்தக சமூகத்திற்கான மேலதிக வேலையாளர்களைக் குறைப்பதற்கான வாய்ப்புகளுக்கமைவான செயற்பாடுகள் தொழில் திணைக்களத்தால் ஆற்றப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் நியாயமற்ற தொழில் முடிவுறுத்தல் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகள் 116 என்பதுடன், 68 ஆண்டு காலப்பகுதியில் தீர்க்கப்பட்டிருந்தது.

தொழில் முடிவுறுத்தலை தேவைப்படுத்திய 36 விண்ணப்பங்கள் திணைக்களத்தினால் பெறப்பட்டிருந்ததுடன், 24 இற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## பணிப் பகிஷ்கரிப்பு

பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளின் உழைக்கும் அணியினால் மேற்கொள்ளப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புகளின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் 33 என அறிக்கையிடப்பட்டுள்ளது. அவற்றில் பங்குபற்றிய வேலையாட்களின் மொத்த எண்ணிக்கை 10,312 என்பதுடன் இதனால் இழக்கப்பட்ட மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 58,279 ஆகும்.

## சட்ட விடயங்கள்

தொழில் திணைக்களமானது, தொழில் கட்டளைச்சட்டங்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதனூடாக வேலையாட்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதுடன், தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பினை பேணுதலாகும். இதன்படி, 2017 ஆம் ஆண்டளவில் நாடளாவியரீதியில் தொழில் அலுவலகங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

2017 ஆம் ஆண்டில் நாடளாவியரீதியில் தொழில் அலுவலகங்களில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளின் விபரங்கள்

| உரிய சட்டம் | 2017.01.01 இலுள்ள மீதி | ஆண்டு காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தள்ளுபடிசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | வழக்குகளினூடாக அறவிடப்பட்ட தொகை | வழக்குகளினூடாக அறவிடப்பட வேண்டியிருக்கின்ற தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 2706 | 1363 | 161 | 125,186,398,00 | 130,505,316.00 |
| கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 253 | 40 | 8 | 1,275,836,00 | 136,650.00 |
| தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 9 | 13 | - | - | 23,767,677.45 |
| சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 547 | 115 | 22 | 2,337,852,00 | 7,346,025.93 |
| கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 161 | 41 | 8 | 296,264,00 | 20,388,024.05 |
| தொழில் நியாயாதிக்க கட்டளைகள் | 449 | 62 | 16 | 2,699,358.00 | 35,181,727.68 |
| பெண்கள், இளம் நபர்கள்,சிறுவர் தொழில் சட்டம் | 14 | 6 | - | - | - |
| ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 9013 | 2343 | 2159 | 2,141,840,039.00 | 2,066,196,116,45 |
| மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம் | 1 | 2 | - | - | - |
| வரவு செலவுத்திட்ட நிவாரணச் சட்டம் | 31 | 23 | - | - | 2,500,695.60 |
| அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் | 0 | 4 | - | - | 865,000.00 |

2017 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை

| நீதிமன்றம் | 2017.01.01 இல் மீதி | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | விசாரிக்கப்பட்ட வழக்குகள் | வழக்குகளிலிருந்து பெறப்பட்ட தொகை (ரூபா) | வழக்குகளிலிருந்து பெறப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| மேல் நீதிமன்றம் | 148 | 33 | - | - | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 301 | 35 | - | - | - |
| உயர் நீதிமன்றம் | 167 | 104 | - | 98 | - |
| மாவட்ட நீதிமன்றம் மற்றும் வர்த்தக உயர் நீதிமன்றம் | 257 | 11 | 3,132,454,228.41 | 58 | 255,528,784.03 |
| நீதவான் நீதிமன்றம் | 15,140 | 4,012 | 2,286,887,233.16 | 2,974 | 2,273,635,747.00 |


## சமூகப் பாதுகாப்பு

உழைக்கும் சமூகத்திற்கான ஓய்வூதிய வாழ்க்கையைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையில் இயங்குகின்ற பாரிய ஓய்வூதிய பணிக்கொடை நிதியமான ஊழியர் சேமலாப நிதியம் தொழில் திணைக்களத்தினால் பேணப்படுகின்றது. இதன்படி, 2017 ஆம் ஆண்டில் ஊ.சே.நிதியத்தில் பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களின் எண்ணிக்கை 7777 ஆகும்.

## உதவுதொகைகளைச் சேகரித்தல்

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தினால் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்துப் பணியாளர்கள் தொடர்பிலான குறித்த மாதமொன்றுக்கான உதவுதொகைகளை அடுத்த மாதத்தின் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்வதற்கு தொழில்தருநர்கள் சட்டரீதியாக பிணிக்கப்படுகின்றனர்.

கடந்த ஐந்த ஆண்டு காலப்பகுதியில் உதவுதொகைகளின் சேகரிப்பின் முன்னேற்றம்




குறிப்பு:2017 ஆம் ஆண்டுக்கான உதவுதொகைச் சேகரிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்றம் 2017.09.30 இல் மதிப்பிடப்பட்டவாறான எண்ணிக்கையில்

| ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம் | 2017.12.31 இலுள்ளவாறு |
|---|---|
| பணியாளர்களின் ஒட்டுமொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை | 17,131,226 * |
| பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை | 223,114 * |
| நிதியத்தின் பெறுமதி (ரூபா மில்.) | 1,987,753 |
| செயலுறு பணியாளர்களின் எண்ணிக்கை | 2.29 ** |
| செயலுறு தொழில்தருநர்களின் எண்ணிக்கை | 72,964 ** |

* 2016.12.31 இலுள்ளவாறு நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவலின்படி

** 2017.09.30 இலுள்ளவாறு மதிப்பிடப்பட்ட தொகைகள்

| | | 2017.12.31இலுள்ளவாறு |
|---|---|---|
| புதிய பதிவுகள் | பணியாளர்கள் | 490,847 ** |
| | தொழில்தருநர்கள் | 4,804 ** |
| நன்மைகள் கொடுப்பனவு | செலுத்தப்பட்ட நன்மைகள் (ரூபா. மில்.) | 91,093 ** |
| சேகரிக்கப்பட்ட உதவுதொகைள் (மில். ரூபா) | | 98,834 ** |
| ஊ.சே.நி வீடமைப்புக் கடன் | அனுமதியளிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண். | 8,135 ** |
| | அனுமதியளிக்கப்பட்ட தனிப்பட்ட கடன்களி-ன்பெறுமதி(ரூபா. மில்.) | 3,562 ** |

** 2017.09.30 இலுள்ளவாறு நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவலின்படி

2017 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை

| நன்மைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஓய்வூதிய வயதை அடைவதன் பேரில் சேவையிலிருந்து ஓய்வூதியத்தின் போதான நன்மைக் கொடுப்பனவுகள் | 87268 |
| திருமணத்தின் போது சேவையிலிருந்து விலகுகின்ற பெண்களுக்கான நன்மைக் கொடுப்பனவுகள் | 22426 |
| நிரந்தர இயலாமை காரணமாக பதவியை வெறிதாக்குகின்றபோது நன்மைகள் கொடுப்பனவு | 1048 |
| இறக்கின்ற உறுப்பினர் நன்மைகள் | 4738 |
| 30%முன் ஓய்வூதிய நன்மைகள் | 33014 |
| வெளிநாடொன்றில் நிரந்தரமாக வதிப்பது தொடர்பான நன்மைக் கொடுப்பனவுகள். | 1959 |
| அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரமான ஓய்வூதியப் பதவியினைப் பெறுவதன் மீதான நன்மைக் கொடுப்பனவு | 13488 |
| ஆட்க்குறைப்பு அல்லது கம்பனிக்கு மாறுவதன் காரணமாக அரச கூட்டுத்தாபனம் சபை மூடப்படுவதன் விளைவாக சேவையிலிருந்து விலகுகின்ற பணியாளர்களுக்கான நன்மைகள் கொடுப்பனவு | 2785 |

2017.01.01 இலிருந்து 2017.12.31 வரையிலான நிதிசார் முன்னேற்றச் செயற்பாடு

| நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்பாடுகள் | 2017 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் | | 2017.01.01 இலிருந்து 2017.12.31 வரையிலான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | பௌதீகம் | நிதி ரூபா. மில். | பௌதீகம் | நிதி ரூபா. மில். |
| புதிய தொழில்தருநர்களின் பதிவுகள் | 8000 | - | 7718 | - |
| ஊ.சே.நி பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள | 1 | 1,000,000 | 1 | 1,552,500 |
| தொழிலைக்காட்சிகளில் விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்தல் | 100% | 8,000,000 | 45% | - |
| வானோலி அலைவரிசைகளில் விளம்பரங்களை ஒலிபரப்புச் செய்தல் | 100% | 4,000,000 | 100% | 2,399,130 |
| கருத்திட்டத்திற்காக ஸ்கானர்களைக் கொள்வனவு செய்தல் | 100% | 16,000,000 | 100% | 16,500,000 |
| 100இ000உறுப்பினர்களின் கைவிரல் பதிவினைப் பெறுதல் (வெளி வளங்கள்) | 100,000 | 17,000,000 | - | - |
| திணைக்கள அலுவலர்களின் கைவிரல் பதிவினை எடுத்தல் | 50,000 | - | 12600 | - |
| முதல் அறிவித்தலை அனுப்புதல் | 11,000 | - | 10,888 | - |
| முதல் அறிவித்தல் அனுப்புவதிலிருந்த எதிர்பார்க்கப்பட்ட தொகை (ரூபா மில்.) | 6000 | - | 6263 | - |
| முதல் அறிவித்தலை அனுப்புதல் | 7500 | - | 6613 | - |
| இறுதி அறிவித்தல் அனுப்புவதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட தொகை (ரூபா மில்.) | 5000 | - | 4048 | - |
| தொழில் ஆணையாளர் அதிபதியின் கணக்கில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை (ரூபா மில்.) | 4000 | - | 9529 | - |
| பொது வைப்புக் கணக்கில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை (ரூபா மில்.) | 800 | - | 1118 | - |
| தனியார் சேமலாப நிதியம் (ரூபா. மில்.) மீது நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 80 | - | 82 | - |

## சமூக கலந்துரையாடல்

தொழில் திணைக்களமானது ஆலோசனை மற்றும் இணைந்து தீர்மானம் எடுத்தலில் ஈடுபடுவதற்காக சமூக பங்குதாரர்களிடையே கலந்துரையாடல் மற்றும் கூட்டுறவினை மேம்படுத்து வதனூடாக தொழிற்றுறை அமைதி மற்றும் ஐக்கியத்தினைப் பேணி பொருளாதார மலர்ச்சியை அடைவதற்கு அர்ப்பணிக்கின்றது.

இதன்படி, சமூக கலந்துரையாடலை மேம்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

| | நிகழ்ச்சித் திட்டம் / செயற்பாடு | 2017 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | மேலதிக ஏற்பாடுகளைப் பெறுதல் | | 2017.10.01 2017.12.31 வரையான பௌதீக, நிதி முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி | பௌதீகம் | நிதி | பௌதீகம் | நிதி |
| 1 | சமூக கலந்துரையாடலை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 139 | 1,475,000.00 | 139 | 1,557,945.00 | 128 | 1,442,419.00 |
| 2 | பிராந்திய மற்றும் மாவட்ட மட்டத்திலான ஆலோசனை சபைகள் | 51 | 688,500.00 | 51 | 688,500.00 | 48 | 561,304.00 |
| 3 | 'சம்பாஷனை' சஞ்சிகை | 1 | 40,000.00 | 1 | 40,000.00 | 1 | 25,500.00 |
| 4 | சமூக கலந்துரையாடல் போட்டி | 100% | 796,500.00 | 100% | 1,213,555.00 | 100% | 1,005,224.59 |

| நிகழ்ச்சித்திட்டங்கள் | 2017 இல் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்கள் |
|---|---|---|
| நிறுவனம்சார் பயிற்சிப்பட்டறை | 60 | 2648 |
| முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் | 10 | 407 |
| பகுதியளவிலான அரச துறை | 12 | 545 |
| பிராந்திய ஆலோசனை சபைகள் | 8 | 277 |
| மாவட்ட அலுவலக ஆலோசனைச் சபை | 40 | 1333 |
| மாவட்ட அலுவலக நிறுவனங்கள் | 32 | 1155 |
| உப தொழில் அலுவலக நிறுவனங்கள் | 14 | 469 |

சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு என்ற எண்ணக்கருவினை மேம்படுத்துவதற்காக தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் பின் தொடர் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையின் பகுதியாக, திணைக்களமானது வருடாந்தம் நாடளாவிய சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தல ஒத்துழைப்புப் போட்டியை ஒழுங்கமைத்து, நடத்துவதுடன், 2017 ஆம் ஆண்டிலும் போட்டி வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந் ததுடன், வெற்றியாளர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டிருந்தன. சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவினை எண்ணக்கருவினை உச்சளவில் நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனங்களை இனங்காண்பதற்கு நிறுவன மட்டத்திலலும், பணியாளர்களின் புத்துருவாக்க திறன்களைப் பாராட்டுவதற்காகவும் தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்குமாக நாடளாவியரீதியில் சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுப் போட்டி நடத்தப்பட்டது.

## தொழிற்றுறைப் பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம்


சுகாதாரமான வேலைச் சுற்றுப்புறச்சூழல் விபத்துக்கள், தீங்குகளைத் தவிர்த்து வேலையாட்களின் பயனுறுதியையும் வினைத்திறனையும் அதிகரிப்பதுடன், பொருட்களின் உற்பத்திகளின் மற்றும் விநியோகிக்கப்பட்ட சேவைகளின் தரத்தைச் செம்மைப்படுத்துவதிலும் பங்களிப்புச்செய்கின்றது. தொழில் திணைக்களம் வேலைத்தல விபத்துக்களையும், தீங்குகளையும் மற்றும் தொழில்சார் நோய்களையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது.

2017 ஆம் ஆண்டில், தொழில் திணைக்களம், 4943 புலன்விசாரணைகளையும், தொழில்சார் விபத்துக்கள்

தொடர்பான முறைப்பாடுகளில் விசாரணைகளையும் நடத்தியுள்ளதுடன்,அதிகளவிலான ஆபத்துள்ள இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதி தொடர்பாக 7530 பரிசோதனைகளயும் மேற்கொண்டுள்ளது. ஆய்வாண்டு காலப்பகுதியில், 68 மரணத்தை ஏற்படுத்திய விபத்துக்கள் மற்றும் 1451 மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ளதுடன், அவையனைத்தும் திணைக்களத்தினால் விசாரணை செய்யப்பட்டுள்ளன.

தொழில்சார் பாதுகாப்பு வாரத்தைக் குறிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் 2017 ஒக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்டது.

தொழில்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை இலக்காகக்கொண்ட தொழிற்சாலைகளின் புதிய பதிவுகளைப் பின்வருகின்ற வரைபடம் காட்டுவதுடன், 2017.12.31. இலுள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 28,854 ஆகும்.




2017 ஆம் ஆண்டில், தொழில்சார் நோய்களை ஏற்படுத்தக்கூடிய வேலைச் சுற்றுப்புறச் சூழலைப் பரிசோதிப்பதற்காக 45 சூழல்சார் அளவீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், தொழில்சார் நோய்களை அல்லது அறிகுறிகளை ஆரம்பத்தில் கண்டறிவதற்கு எண்ணிக்கையான பௌதீகம்சார் பரிசோதனைகள் 1235 பணியாளர்களில் நடத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, 271 தொழில் சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆய்வாண்டு காலப்பகுதியில் 399 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

## தொழில் தரங்கள்

தொழில் திணைக்களத்தின் பிரதான பணிகளிலொன்று,தனியார் துறையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் பணியாளர்களின் சேமநலன்களை உறுதிப்படுத்தும் நோக்கில் வேலையின் நியமங்கள் மற்றும் நியதிகளை வகுத்தமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது. இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் பின்வருகின்ற செயற்பாடுகளை ஆற்றுகின்றது.

- மலர், மரக்கறி மற்றும் பழ ஏற்றுமதிக் கைத்தொழிலுக்குரிய ஆகக்குறைந்த சம்பளத்தை நிர்ணயித்தல்.
- அலுவலக காலம் முடிவடைந்துள்ள சம்பளச் சபைகளுக்கு பிரதிநிதிகளை நியமித்தல்.
- கொக்கோ, கறுவா, மிளகு வளர்ப்பு மற்றும் பதப்படுத்துதல் கைத்தொழிலின் சம்பளங்களை மாதாந்தம் பிரசுரித்தல்.
- ஐந்து நாள் வேலை வாரத்திற்கு 200 அனுமதிகளை வழங்குதல்.
- கூட்டு ஒப்பந்தத்தின் காலாவதி பற்றி 33 பரிசோதனைகளை நடத்துதல்
- தேயிலை வளர்ப்பு கைத்தொழில் ஆணையை வெளியிடுதல் மற்றும் சேவை நிபந்தனைகளை வரைதல்.
- தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்.

## பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.

இலங்கையின் உற்பத்திச் செயன்முறையில் முக்கிய பங்கினை பெண் தொழில்வாய்ப்புகள் வகிக்கின்றன. ஆகவே, பெண் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் அவர்களின் தொழில்சார் உரிமைகளை அதேபோன்று சுகாதாரத்தையும் சேமநலனையும் வழங்குதல் மற்றும் நாட்டின் உயிரோட்டமான சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் அத்துடன் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல் போன்றவை திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளாகும்.

இதன்படி, 2017 ஆம் ஆண்டில் பின்வருகின்ற செயற்பாடுகள் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன

| நிகழ்ச்சித்திட்டம் | 2017ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 2017.12.31 இலுள்ளவாறு பௌதீக செயலாற்றுகை | 2017.12.31 இலுள்ளவாறு நிதி செயலாற்றுகை |
|---|---|---|---|
| **திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | |
| சர்வதேச மகளீர் தினம் | 01 | 100 | 448,529.00 |
| மரநடுகை நிகழ்ச்சித்திட்டதை நடத்துதல் | 03 | 03 | 89,550.00 |
| அலுவலக நேரத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | 13 | 09 | 34,600.00 |
| பௌதீக ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | 03 | 02 | 36,500.00 |
| இரவு நேர வேலை பற்றி சோதனை செய்தல் | 70 | 61 | 176,280.00 |
| பெண்களின் முறைப்பாடுகள் | - | 09 | - |
| போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் | 12 | 08 | 29,300.00 |
| சிறுவரின் முறைப்பாடுகள் | - | 87 | - |
| **சீரிய வேலை செலவினத் தலைப்பின் கீழ் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | |
| சுயதொழில்வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | 04 | 04 | 181,820.00 |
| பராமரிப்பு நிலையங்களை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | 18 | 18 | 31,000.00 |
| தொற்றாத நோய்கள் மீதான நிகழ்ச்சித்திட்டங்களும் கிளினிக்கும் | 04 | 03 | 76,100,00 |
| அதிகளவு வீதத்தில் பாடசாலையைவிட்டு நீங்குகின்ற பாடசாலை சிறுவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | 46 | 29 | 31,450.00 |
| சிறுவர் தொழிலுக்கெதிரான உலக தினம் | 01 | 100 | 229,500.00 |
| தீங்கிளைக்கும் சிறுவர் தொழில் பற்றி விசேட விசாரணைகளை நடத்துதல் | 52 | 46 | 141,950.00 |
| சுயதொழில்வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | 2 | 2 | 100,400.00 |

சிறுவர் தொழிலுக்கெதிரான உலக தினத்தையொட்டி வைபவமொன்று இந்த ஆண்டு ஒழுங்கமைக் கப்பட்டிருக்கவில்லை. ஆனால், சிறுவர் தொழிலின் தீங்கிளைக்கின்ற வடிவங்களிலினால் பாதிப்படையக்கூடிய வருமானம் குறைந்த குடும்பங்களின் பாடசாலைச் சிறுவர்களை இலக்காக் கொண்டு 'சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்' என்ற செய்தியைத் தாங்கிய அப்பியாசப் புத்தகங்கள் பாடசாலைகளில் விநியோகிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

சர்வதேச சிறுவர் தின ஞாபகார்த்தமாக, வலிமட பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 10 பாடசாலைகளின் 50 சிறுவர்கள் வினா மற்றும் பாட்டுப் போட்டிகள், நுண்ணறிவு சோதனைகள் மற்றும் கோல் மாற்றி ஓடும் நிகழ்வுகளில் பங்குபற்றி நடத்தப்பட்டிருந்ததுடன், வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்படுவதுடன், பங்குபற்றிய அனைவருக்கும் அன்பளிப்புகள் வழங்கப்படும்.

## நிருவாகச் செயற்பாடுகள்

### பௌதீக வளங்களின் அபிவிருத்தி

தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் அவர்களது கடமைகளை வினைத்திறனுடன் ஆற்றுவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

இதன்படி,தொழில் திணைக்களத்தின் காணி மீதான 'மெஹேவரபியஸ' கட்டடத்தின் நிருமாணச் செயற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன. நிருமாணச் செயற்பாடுகளுக்காக 2017 ஆம் ஆண்டில் உறப்பட்ட செலவீனம் 2133.75 மில்லியனாகும். 2017.12.31 இல் கட்டடத்தின் பௌதீக மன்னேற்றம் 67.92.% ஆகும். அவிசாவெல மற்றும் நீர்கொழும்பு தொழில் அலுவலக நிருமாணச் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

தொழில் அலுவலகங்களின் நிருமாண முன்னேற்றங்கள் பின்வருமாறு:

| நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | 2017 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் | | 2017.12.31 இலுள்ளவாறான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | பௌதீகம் | நிதி ரூபா.மில். | பௌதீகம் | நிதி ரூபா.மில். |
| மெஹேவர பியஸ | 80% | 3200 | 67.92% | 2133.80 |
| அவிசாவெல | 100% | 0 | 100% | 0 |
| நீர்கொழும்பு | 100% | 0 | 100% | 0 |
| பொலநறுவை | கட்டம்03 - 100% | 25 | கட்டம்03 - 100% | 0 |
| குருணாகல் | கட்டம்02 - 100% | 61 | கட்டம்02 - 30% | 61 |
| புத்தளம் | கட்டம்03 - 75% | 15 | கட்டம்03 - 98% | 15 |
| அம்பலாங்கொடை | கட்டம்02 - 35% | 21 | கட்டம்02 - 20% | 21 |
| அனுராதபுரம் | கட்டம்02 - 100% | 4 | கட்டம்02 - 100% | 3.447 |
| மஹியங்கனை | கட்டம்02 - 5% | 21 | கட்டம்02 - 50% | 21 |
| இரத்தினபுரி | கட்டம்01 - 75% | 25 | 3% | 24.99 |
| பதுளை | கட்டம்01 - 75% | 25 | 2% | 24.79 |
| ஹட்டன் | கட்டம்01 - 75% | 15 | 2% | 14.98 |
| நாவுல | கட்டம்01 - 75% | 15 | 2% | 0.014 |
| மெஹேவர பியஸ | கட்டம்01 - 75% | 15 | 2% | 0.023 |

## மனித வளங்கள் முகாமைத்துவம்

பதவியினரை உச்சளவில் பேணுதல் திணைக்களத்தின் கடமைகளை பயறுதிவாய்ந்ததாகவும் வினைத்திறனுடனும் ஆற்றுவதற்கு உதவுகின்றது. இது தொடர்பில் ஆற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

- தொழில்நுணுக்கசேவையில் ஆட்சேர்ப்பிற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுதல்.
- விஞ்ஞான சேவையின் ஆராய்ச்சி அலுவலரின் ஆட்சேர்ப்பு நடைமுறையை பொது சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்புதல்.
- தொழில் ஆணையாளரின் (தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்) ஆட்சேர்ப்பு நடைமுறையை பொது சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்புதல்.
- சட்ட அலுவலர்கள், தொழில் அலுவலாகள், சுருக்கெழுத்தாளர்கள், சாரதிகள் அலுவலக வேலையாளர் சேவைப் பதவிகளில் ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- பதவிநிலை அலுவலர்களின் செயலாற்றுகையை அனுப்புதல் (விடய இல.: 1அ,1ஆ,2,3,17)
- சீருடை படிகளை வழங்குதல் (காவலாளிகள் சேவை, சாரதிகள் மற்றும் கே.கே.எஸ்)
- வருடாந்த வேதன ஏற்றத்தை அனுமதித்தல்.
- உதவித் தொழில் ஆணையாளர், பொறியியலாளர் சேவை, தொழில் அலுவலர்கள், மனித வளங்கள் அலுவலர், சாரதிகள் மற்றும் அலுவலக வேலையாளர் சேவைக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சையை நடத்துதல்.
- ஆண்டின் நடுப்பகுதி செயலாற்றுகையை அனுப்புதல்.
- சொத்துக்களின் மற்றும் பொறுப்பகளின் அறிக்கையை அனுப்புதல்.
- பொது நிருவாக சுற்றிக்கை 2016/03 இன்படி வேதன மாற்றம்.
- திணைக்களத்தினை மீளக்கட்டமைக்கும் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஆரம்ப செயற்பாடுகளை ஆற்றுதல்.

## நூலகம் மற்றும் தகவல் சேவை

தொழில் திணைக்களத்தின் நூலகத்தின் பிரதான பொறுப்பு, தொழில்தருநர்-பணியாளர் சமூகத்தின் முன்னேற்றம் தொடர்பில் இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் வகையில் விடயத்துடன் தொடர்புபட்ட தகவல்களைச் சேகரித்தல், அத்தகைய அறிவினைப் பரப்புவதற்கு வழி வகுத்தல் மற்றும் பொது மக்களிடையே தொழில் துறை தொடர்பில் பிரச்சாரம் செய்தல் என்பவையாகும். இதற்கு மேலதிகமாக, நூலகத்தினால் பெறப்பட்ட புதிய புத்தகங்கள் கணனி மயப்படுத்தப்பட்டு தரவுத்தளமாகப் பேணப்படுகின்றது.

தொழில் திணைக்களம்,தொழில் அரும்பொருளகத்தினைப் பேணுவதுடன், இதன் ஆரம்பம் முதல் இலங்கையில் தொழில் துறையின் பரிணாமத்தை விளக்குவதுடன், தொழில் துறையுடன் தொடர்புபட்ட பழமையான பாரம்பரிய கட்டளைச்சட்டங்களையும், ஒழுங்குவிதிகளையும் மற்றும் ஏனைய ஆவணங்களையும் பேணுகின்றது.

## முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் செயற்பாடுகளை மீளாய்தல்

தொழில் அலுவலகங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, வலய மட்டத்தில் 06 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன், பிராந்திய அலுவலகங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு 02 கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

ஆய்வாண்டு காலப்பகுதியில் தொழில் அலுவலர்களினால் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகள், முறைப்பாடுகளின் விபரங்கள் மற்றும் அலுவலகங்களினால் பெறப்பட்ட நீதிமன்ற வழக்குகள் பற்றிய தகவல்களைக் கணினிமயப்படுத்துவதற்கான முறையான தரவுத் தளத்தைத் தாபிப்பதற்கான தொழில் பரிசோதனை முறைமை விண்ணப்பம் (LISA) நாளதுவரைப்படுத்தப்பட்டது. 34 அலுவலகங்களின் கடமையுடன் தொடர்புபட்ட நோக்கங்களுக்கான தொழில் பரிசோதனை முறைமை விண்ணப்ப நிகழ்ச்சித்திட்டத்தை பரிசோதித்து, இணையத்தளப் பிரச்சினைகளை, இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்துள்ள விடயப் பிரச்சினைகளைப் பிரித்தல், மேன்முறையீட்டு பதிவேட்டினைப் பராமரித்தல் மற்றும் நீதிமன்ற வழக்குப் பதிவேட்டினைச் சரிசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அலுவலர்களின் செயலாற்றுகையை செம்மைப்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டன.

| விடயம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பதவிநிலை அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 6 |
| முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 18 |
| கணினி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 |
| பட்டப்பிற்படிப்பு மற்றும் டிப்புளோமா கற்கைநெறிகள் | 80 |
| வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 24 |
| ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 5 |
| வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 6 |

## நிதி முகாமைத்துவம்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திணைக்களமானது அதனது நிதி வளங்களை பயனுள்ள வகையில், ஆக்கமுள்ளதாக மற்றும் சிக்கனமாக கையாள முடிந்திருந்தது.

பயனுள்ள நிதி முகாமைத்துவத்திற்காக பின்வருகின்ற செயற்பாடுகள் ஆற்றப்பட்டன.

- திணைக்களத்தின் பெற்று வழங்கல் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- பெற்று வழங்கல் செயன்முறையினூடாக பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகித்தல்.
- உப அலுவலகங்களுக்கான கட்டுநிதியை விநியோகித்தல் மற்றும் அதனுடனான நிதிச்செயற்பாடுகளைக் கண்காணித்தல்.
- மாதாந்த, ஆண்டிற்கு இருமுறையான மற்றும் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் உரிய திகதியில் அவற்றினை உரியவர்களிடம் சமர்ப்பித்தல்.
- ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளும் இணைந்த வகையில் வெளிவாரித் தரப்பினர்களிடமிருந்தான பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தையும் கையாளுதல்.
- திணைக்களத்தின் மூலதனச் சொத்துக் கணக்கெடுப்பினை நடத்துதல் மற்றும் அகற்றுதல்.
- திணைக்கள அலுவலர்களின் வேதனாதிகள், முற்பணங்கள் மற்றும் படிகளைச் செலுத்துதல்.

2017 சனவரி முதல் டிசெம்பர் 31 வரை திணைக்களத்தின் நிதிசார் முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்டம் | செலவின வகை | 2017 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு (ரூபா) | 2017 டிசெம்பர் 31 இலுள்ளவாறான செலவினம |
|---|---|---|---|
| 221 | மீண்டெழுவது | 1,505,256,000 | 1,451,795,889.23 |
| | மூலதனம் | 3,607,300,000 | 2,503,986,516.61 |

## தொழில் துறையுடன் தொடர்புபட்ட புள்ளிவிபரவியல் அறிக்கைகளை வெளியிடுதல்

இலங்கை தொழில் துறையில் வெளிப்படுகின்ற போக்குகள் மற்றும் சிக்கலான மாற்றங்களை ஆராய்ந்து மிகவும் சரியான தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் மற்றும் பகுத்தராய்தல் மற்றும் அவ்வாறு சேகரித்த புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்திற்காகத் திட்டமிடுதலும் தொழில் திணைக்களத்தின் பணியாகும்.

2017 சனவரி 01 முதல் டிசெம்பர் 31 வரையான பௌதீக, நிதி முன்னேற்றங்கள்

| நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2017.01.01 - 2017.12.31 வரையான முன்னேற்றம | |
|---|---|---|
| | பௌதீகம் | நிதி (ரூபா) |
| வருடாந்த வேலைவாய்ப்பு ஆய்வு அறிக்கை 2016 | அச்சிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டதுடன்,இணையத்தளத்திலும் (ரூபா) வெளியிடப்பட்டது | 76,500.00 |
| வருடாந்த வேலைவாய்ப்பு ஆய்வு 2017 | 2017 ஆம் ஆண்டின் ஆய்வு கணனி மயப்படுத்தப்படுகின்றது (ரூபா) | 159,380.00 |
| தொழில் புள்ளிவிபர வருடாந்த வெளியீடு 2016 | பிரதிகள் வெளியிடுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளத்தில் வெளியிடப்படும் | - |
| ‘இலங்கை பணியாளர்களின் காலாண்டு சஞ்சிகை’ 2017 | ஏனைய நிறுவனங்களிடமிருந்து வெளியீட்டுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன (ரூபா) | 3,500.00 |
| சராசரி உழைப்புகள் மற்றும் வேலை செய்யும் மணித்தியாலங்கள் பற்றிய ஆய்வறிக்கை 2016 | இறுதி அறிக்கை வெளியிடுவதற்கு வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது (ரூபா) | 2,800.00 |
| சராசரி உழைப்புகள் மற்றும் வேலை செய்யும் மணித்தியாலங்கள் பற்றிய ஆய்வறிக்கை 2017 | மார்ச் ஆய்வு நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2017 செப்ரெம்பர் சேவை நடத்தப்படுகின்றது (ரூபா) | 48,300.00 |
| ஆகக்குறைந்த வேதனச் சுட்டியைக் கணித்தல் | குறித்த காலப்பகுதிக்கான சம்பளக் கட்டுப்பாட்டு சபைக்கமைய மாதாந்த ஆகக்குறைந்த சம்பள சுட்டியை கணிப்பிடுவது ஓகஸ்ட் வரை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது | - |
| ஊழியர் சேமலாப நிதியத்தின் புதிய பதிவுகளை கணினிமயப்படுத்தல் | தரவுத் தளத்திற்கான தரவுகள் பெறப்பட்டு கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன | - |

## தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுகள்

இ - ஆளுகைக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆரம்பச் செயற்பாடுகள் 2017 ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்ட பொதுச் சேவைகளை 2018 ஆம் ஆண்டில் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# 03

# மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

## கடமைகளின் விடயப்பரப்பு

இந்த திணைக்களம் பின்வருகின்ற பணிகளை ஆற்றுவதற்குப் பொறுப்புவாய்ந்தது

- தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையை வகுத்தமைத்து நடைமுறைப்படுத்துதல்
- வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது மற்றும் மேம்படுத்துவது
- தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்
- தொழில் சந்தையின் தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரவச் செய்தல்
- தொழில் இல்லங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வேறு சேவைகள் மற்றும் மேலே உள்ள விடயங்களுடன் தொடர்புபட்டுள்ள மற்றும் இடைநேர் ஏனைய அனைத்து நடவடிக்கைகளும்.

## உபாயரீதியிலான ஆற்றுப்படுத்தல்கள்

### தொலைநோக்கு

"உலக தரத்திலான இலங்கையர் தொழிலணி"

### செயற்பணி

அபார தகுதிகளுடன் கூடிய உலகளாவியரீதியிலான போட்டித்தன்மையுடைய செயற்றிறனுள்ள தொழில் அணியினை விருத்தி செய்தல் மற்றும் இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காக எமது மனித வளங்களின் முழுமையான ஆற்றலைப் பயன்படுத்துதல்

## நீண்ட கால இலக்குகள்

1. உலகளாவியரீதியிலான போட்டித்தன்மையான, பல்லின ஆற்றல்களுடனான தகுதிவாய்ந்த இலங்கை தொழிலணியைக் உருவாக்குதல்.
2. தொழிலின்மையைக் குறைப்பதற்கு பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
3. ஒழுங்கமைக்கப்பட்ட, விரிவான தொழில் சந்தைத் தகவல் முறைமையை விருத்திசெய்தல்.

## திணைக்களத்தின் குறிக்கோள்கள்

1. தேசிய மனிதவலுக் கொள்கையை வகுத்தமைத்தலும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும்.
2. பொருந்தாத திறன்கள் என்ற கட்டமைப்புப் பிரச்சினையைத் தீர்த்தல்.
3. தற்போது தொழிலணியிலிருக்கின்ற அனைத்து இலங்கையர்களுக்கும், எதிர்காலத்தில் தொழிலணிக்குள் நுழையவிருக்கின்றவர்களுக்கும் சரியான தொழில்சார் ஆற்றுப்படுத்தலைத் தீர்மானிப்பதற்கு வசதிகளை வழங்குதல்.
4. மனிதவலு வழங்கலைத் திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆரம்பித்தல்.
5. முறைசாரா துறையினை விருத்திசெய்தல்.
6. தனியார் துறையில் தொழில்களைப் பெறுவதற்காக தொழில் நாடுநர்களை ஊக்குவித்தல்.
7. இலவச அரச தொழில் சேவையை வழங்குதல்.
8. பாதிப்படையக்கூடிய குழுமங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பற்ற பிரதேசத்தில் இருக்கின்ற மக்களுடன் தொடர்புபட்ட மனிதவலு மற்றும் தொழில் வசதிகளை வழங்குதல்.
9. அனைத்து இலங்கையர்களுக்கும் தொழில் சந்தை பற்றிய சரியான உலக மற்றும் உள்நாட்டுத் தகவல்களை வழங்குதல்.
10. உள்நாட்டு மற்றும் உலக தொழில் சந்தைகளின் போக்குகளைத் திட்டமிடுதல்.

தொழிலின்மையைக் குறைத்து, சீரிய தொழிலை உருவாக்குகின்ற பணியினை நிறைவு செய்வதற்காக அதன் மனித வளங்களைப் பணிக்கமர்த்தி, திணைக்களத்தால் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## திணைக்களத்தின் பிரிவுகள்

- நிருவாக, திட்டமிடல்,ஊக்குவிப்பு மற்றும் தொழிற்பாட்டுப் பிரிவு
- கணக்குப் பிரிவு

- மனிதவளங்கள் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
- தொழில் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள் பிரிவு

**2017 டிசெம்பர் 31 வரையான நிதிசார் முன்னேற்றம் (திறைசேரியின் இறுதி இணக்கப்பாட்டு கூற்றிற்கு முன்னர்)**

| | ஏற்பாடு (ரூ. 000) | செலவினம் (ரூ. 000) | வீதம் (மூ) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 356,195 | 347,125 | 97.45% |
| மூலதன செலவினம் | 37,400 | 31,135 | 83.25% |
| மொத்தம் | 393,595 | 378,261 | 96.10% |

**2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள்**

| | மீண்டெழுவது (ரூ. 000) | மூலதனம் (ரூ. 000) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் | 348,950 | - | 348,950 |
| அபிவிருத்திச் செயற்பாடுகள் | - | 31,100 | 31,100 |
| மொத்தம் | 348,950 | 31,100 | 380,050 |

## தொழில் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள் பிரிவு

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், தொழில் நாடுவோர், தொழில் சந்தைக்குள் புதிதாக நுழைபவர்கள் மற்றும் இதற்குள் எதிர்காலத்தில் நுழைய எதிர்பார்ப்பவர்கள் போன்றோருடன் தொடர்புபட்ட வசதிகளுடனான தொழில்வாய்ப்பினை வழுங்கும் நோக்கத்துடன் பல்வேறு நிகழ்ச்சசத்திட்டங்களை நடத்துகின்றது.

**தொழில் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள் செயற்பாடுகள்**

**தொழில் உருவாக்கம்**

- தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- தேவைப்பாடுகளின் அடிப்படையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- தளத்தை வளப்படுத்தல்
- பாதிப்படையக்கூடிய குழுமத்திற்கான நிகழ்ச்சித் திட்டம்
- தொழில்நுணுக்க ஆதரவு நிகழ்ச்சித்திட்டம்

**தொழில் மேம்பாடு**

- தொழில் சந்தை
- தொழில்வாய்ப்பு சமூகங்கள்
- பணிக்கமர்த்தல்
- சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்
- 100 நாள் தொழில் நிகழ்ச்சித் திட்டம்

**தொழில் வழிகாட்டி**

- பல்கலைக்கழக மாணவர்களுக்கு
- பாடசாலை நிகழ்ச்சித்திட்டம (உயர் தரம் / சாதாரண தரம்)
- ஆசிரியர்களுக்கு
- தொழிலற்ற இளைஞர்களுக்கு
- பெற்றோர்களுக்கு
- 'ஹஸற' சஞ்சிகை
- பாதிப்படையக்கூடிய குழுமத்திற்கு
- தொழில்வாய்ப்புள்ள இடங்கள்

## அரச தொழில் சேவை நிலையம்

மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் இப்பிரிவு தொழிற்படுகின்றது. இந்த நிலையங்கள் நாட்டின் 24 மாவட்டங்களிலும் தொழிற்படுவதுடன், தேசிய அரச தொழில்வாய்ப்புச் சேவை நிலையம் பத்திரமுல்லை அலுவலக வளாகத்திற்குள்

அரச தொழில் சேவை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகள்

- தொழிலை நாடுவோர்களைப் பதிவுசெய்தல்
- வெற்றிடங்களையும் நிறுவனங்களையும் பதிவுசெய்தல்
- நிறுவனங்களில் வெற்றிடங்களைப் பார்வையிடுதல்
- தொழிலை நாடுவோர்கள் மற்றும் இருக்கின்ற வெற்றிடங்கள் பற்றி அட்டவணை தயாரித்தல்
- நேர்முகப்பரீட்சை நடத்துதல் மற்றும் தொழில் நாடுநர்களின் தகைமைகளை நிச்சயப்படுத்தல்
- பொருத்தமான தொழில் மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு அனுப்புதல்
- தொழிலை வழங்கதலும் பின்பற்றுதலும்
- தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்
- பயிற்சியளித்தலுக்கான வசதியை வழங்குதல்
- தொழில் அந்தஸ்து மீதான புள்ளிவிபரங்களைச் சேகரித்தலும் வெளியிடுதலும்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களுக்கான வழிகாட்டல்
- மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதலும் ஒழுங்குபடுத்துதலும்

தொழில் நாடுவேரைப் பதிவுசெய்தல் பல வழிகளில் மேற்கொள்ளப்பட்டது. அவை பற்றிய தகவல்களை பிரதேச மட்ட மனித வளங்கள் அபிவிருத்தி உதவியாளர்கள், தொழில் சந்தைகள் மற்றும் தொழில்வாய்ப்பு சேவை நிலையங்கள் என்பவற்றினூடாக சேகரிக்கப்படுகின்றது.

தொழில் ஆர்வமுள்ளவர்களின் விருப்பத்தினடிப்படையில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

## மனிதவளத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

தொழில் சந்தை பற்றிய விபரங்கள், பல்வேறு துறைகளிலிருக்கின்ற கொள்கை வகுப்பாளர்கள், கல்வித் துறையிலிருக்கின்ற கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் விருத்தியாளர்கள் மற்றும் பயிற்சி, ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் விருத்தியாளர்கள் போன்றோர்களால் தேவைப்படுத்தப்படுகின்றது.

தொழில் சந்தை பற்றிய விபரங்களைச் சேகரிப்பதில், விரைவாக மாற்றமடைகின்ற ஆற்றல்களுடனான மனித வளங்களுக்கான தொழில் சந்தையில் கேள்வியை நெருக்கமாகக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுவது அவசியமாகும். மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், தொழில் சந்தை பற்றிய தகவல்களைச் சேகரித்து, பகுத்தாராய்ந்து பரப்புகின்றது.

இத்திணைக்களத்தின் தொழில் சந்தை அலகு, அபிவிருத்தித் தேவைப்பாடுகளின் மீது தொழில் சந்தை கணக்கெடுப்புகள் மற்றும் ஆய்வுகளையும் தொழில் கேள்வி மற்றும் வழங்கல் பற்றிய அய்வுகளையும் நடத்துவதுடன், அதன் காண்பிப்பகளை பரப்புகின்றது. இந்த அலகு தொழில் சந்தை சஞ்சிகை மற்றும் பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட கைந்நூல்களைப் பிரசுரிக்கின்றது.

## தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்

2017 ஆம் ஆண்டில் தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை தொடர்பான முன்னேற்றம்

- தேசிய மனிதவளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையானது, அரசாங்கத்தின் கொள்கைக் கட்டுக்கோப்பின் நடுக்காலப்பகுதியுடன் இணைந்ததாக மீளாயப்பட்டது.
- இந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளவையாக இனங்காணப்பட்ட 25 அமைச்சுக்களிலிருந்து 2017 - 2020 காலப்பகுதி தொடர்பில் கூறப்பட்ட கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் திருத்தத்திற்காக முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.
- 17அமைச்சுக்கள் பூர்த்திசெய்யப்பட்ட செயற்றிட்டத்தை அனுப்பியுள்ளதுடன், தற்போதிருக் கின்ற 17 அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தை நாளதுவரைப்படுத்து வதற்குத் தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் நடைமுறையிலிருக்கின்றன.
- கொள்கையில் ஈடுபட்டுள்ள அமைச்சர்களினால் நிறைவேற்றப்பட்ட தொழிற்பாடுகளின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பது மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை தொழிற்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது.

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2017 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2017.01.01 2017.12.31 வரையான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி ரூபா. மில். | பௌதீகம் | நிதி ரூபா. மில். |
| **தொழில்வாய்ப்பை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் பிரிவு** | | | | | |
| 1 | க.பொ.தா சா.த. மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 2000 | 1.000 | 2132 | 1.226 |
| 2 | க.பொ.தா உ.த. மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 1450 | 0.200 | 1384 | 0.429 |
| 3 | சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 312 | 0.926 | 348 | 0.884 |
| 4 | தொழில்சார் சவால்களிலிருந்து வெளிவருதல் | 100 | 0.876 | 105 | 0.936 |
| 5 | உள்வாரி / வெளிவாரி பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 20 | 0.755 | 20 | 0.795 |
| 6 | ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 25 | 0.709 | 32 | 0.664 |
| 7 | பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 306 | 0.910 | 362 | 0.817 |
| 8 | தொழில்சார் வழிகள் நிகழ்ச்சித்திட்டம் | 7 | 0.180 | 11 | 0.185 |
| 9 | ஹசாறா சஞ்சிகையை அச்சிடுதல் | 2 | 0.300 | 1 | 0.159 |
| 10 | தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 24 | 0.696 | 40 | 0.700 |
| 11 | சமூக தொழில் நிகழ்ச்சித்திட்டம் | 24 | 0.859 | 24 | 0.838 |
| 12 | 100 நாள் தொழில் நிகழ்ச்சித்திட்டம் | 30 | 0.630 | 29 | 0.582 |
| 13 | அடிப்படை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 40 | 0.480 | 138 | 0.461 |
| 14 | தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் | 45 | 0.540 | 45 | 0.561 |
| **மனிதவளத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு** | | | | | |
| 15 | நிதித் துறையில் தொழில் பற்றிய வரையுரு | 100% | 0.250 | 100% | 0.132 |
| 16 | மின்சாரம்,வாயு மற்றும் நீர் விநியோகத் துறைகளில் தொழில் பற்றிய வெட்டுமுகம் | 100% | 0.250 | 70% | 0.008 |
| 17 | மீன்பிடித் துறையில் தொழில் பற்றிய வெட்டுமுகம் | 100% | 0.250 | 100% | 0.293 |
| 18 | அரச துறையில் தொழில்சார் முன்னேற்றம் தொடர்பான ஆய்வு | 100% | 0.250 | 100% | 0.294 |
| 19 | தொழில் சந்தை தகவல் சஞ்சிகை | 100% | 0.300 | 100% | - |
| 20 | சுயதொழில் சாத்தியப்பாடு பற்றிய ஆய்வு | 100% | 0.400 | 90% | 0.006 |
| 21 | சமூக, பொருளாதார தரவுகைநூல் | 100% | 0.300 | 100% | 0.673 |
| **அரச தொழில் சேவைகள் நிலையம்** | | | | | |
| 22 | **அரச தொழில் சேவையை ஆரம்பித்தலும் நாளதுவரைப்படுத்தலும்** | 6 | 2.980 | 6 | 2.987 |
| 23 | **அரச தொழில் சேவையைப் பராமரித்தல்** | 24 | 2.000 | | 1.410 |
| | **தொழிலை நாடுவோரைப் பதிவுசெய்தல்** | | | | 30,697 |
| | **தொழில் வெற்றிடங்களைப் பதிவுசெய்தல்** | | | | 21325 |
| | **பொருத்தமான தொழில்** | | | | 25014 |
| | **தொழில்வாய்ப்பை வழங்குதல்** | | | | 4285 |
| 24 | **மாவட்ட தொழிற் சந்தைகளை நடத்துதல்** | 12 | 1.863 | 11 | 1.732 |

| 25 | தொழில்வாய்ப்பு சேவைகளின்-தொடரறா இணைய நுழைவாயில் ஏற்பாட்டிற்கான தொழில் சந்தை மீது தரவு முறைமையைத் தாபித்தல் | 100% | 3.000 | 20% | 1.853 |
|---|---|---|---|---|---|
| **சீரிய வேலை** | | | | | |
| 26 | மாவட்ட தொழிற் சந்தைகளை நடத்துதல் | 4 | 1.300 | 4 | 1.200 |
| 27 | தொழில்வாய்ப்பு சேவைகளின்-தொடரறா இணைய நுழைவாயில் ஏற்பாட்டிற்கான தொழில் சந்தை மீது தரவு முறைமையைத் தாபித்தல் | 7 | 0.165 | 7 | 0.165 |

2017/12/31வரை பணிக்கமர்த்துவதில் முன்னேற்றம்

| மாவட்டம் | நேரடியாக பணிக்கமர்த்துதல் | | சுயதொழில்வாய்ப்பு / தொழில் முயற்சியாளர்-களை உருவாக்குதல் |
|---|---|---|---|
| | அரச தொழில் சேவை நிலையத்தினூடாக | பிரதேச செயலாளர் பிரிவில் | |
| கண்டி | 261 | 349 | 87 |
| கேகாலை | 158 | 370 | - |
| கொழும்பு | 340 | 66 | - |
| இரத்தினபுரி | 190 | 282 | - |
| பதுளை | 150 | 253 | 16 |
| குருணாகல் | 585 | 374 | 211 |
| களுத்துறை | 259 | 309 | 159 |
| காலி | 160 | 177 | 26 |
| மட்டக்களப்பு | 131 | 268 | 105 |
| கம்பஹா | 305 | 332 | 46 |
| மாத்தறை | 291 | 360 | 17 |
| புத்தளம் | 87 | 212 | 289 |
| அம்பாந்தோட்டை | 303 | 306 | - |
| அனுராதபுரம் | 143 | 45 | - |
| யாழ்ப்பாணம் | 284 | 279 | 183 |
| கிளிநொச்சி | 15 | 17 | 50 |
| திருயோணமலை | 54 | 24 | 7 |
| நுவரெலியா | 0 | 43 | - |
| மாத்தளை | 124 | 283 | 10 |
| அம்பாறை | 65 | 235 | 144 |
| பொலநறுவை | 116 | 2 | 54 |
| மொனாறாகலை | 128 | 112 | - |
| வவுனியா | 65 | 35 | 66 |
| மன்னார் | 50 | 48 | 31 |
| முல்லைத்தீவு | 21 | - | 10 |
| மொத்தம் | 4285 | 4781 | 1511 |

மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

| மாவட்டம் | அமைவிடம் | தொழில் நாடுநரின் எண்ணிக்கை | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | பயிற்சியளிக்கின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை | பொருத்தமான தொழில் |
|---|---|---|---|---|---|
| காலி | லபுடுவ | 918 | 32 | 05 | 421 |
| பதுளை | ஹலியலய | 854 | 30 | 03 | 650 |
| பதுளை | உவபறணகம | 1251 | 28 | 02 | 820 |
| பொலநறுவை | மூஇளைஞர் முகாம் | 674 | 38 | 07 | 1504 |
| கம்பஹா | மினுவங்கொடை | 710 | 38 | 05 | 700 |
| திருயோண-மலை | மச்சீர் கலையர-ங்கம் | 559 | 45 | 03 | 391 |
| நுவரெலியா | நகர மண்ணடபம் | 820 | 30 | 03 | 353 |
| மொனாறாகலை | மாவட்ட செயலகம் | 768 | 25 | 07 | 850 |
| மாத்தறை | மாவட்ட செயலகம் | 920 | 26 | 07 | 685 |
| அம்பாந்தே-தாட்டை | தங்காலை | 729 | 38 | 04 | 739 |
| புத்தளம் | சிலாபம் | 510 | 42 | 7 | 758 |
| மொத்தம் | 10 | 8713 | 372 | 53 | 7871 |

## விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

1. திணைக்களத்தின் முகாமைத்துவ தகவல் முறைமையைத் தயாரித்தல்

   திணைக்களமானது இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலிருந்து 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் கள முன்னேற்ற முகாமைத்துவ முறைமையைத் தயாரித்தல், திணைக்களத்தில் இணைக்கப் பட்டுள்ள அனைத்து கள அலுவலர்களுக்காக மடிக்கணினிகளைக் கொள்வனவு செய்தல் பற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி என்பன இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

   இதன் முடிவினை நோக்கிய ஆரம்ப நடவடிக்கையாக, கோரப்பட்ட இந்த பெற்றுவழங்கல் மற்றும் விலை மனுவிற்கான தொழில்நுணுக்க குறிப்பீடுகளைத் தீர்மானிப்பதற்கு தொழில் நுணுக்கக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பெறப்படுகின்ற விலைமனுக்கள் முடிவடைகின்ற திகதி 2017.10.12 ஆகும்.

2. மாற்றுத் திறனாளிகளுடனிருக்கின்ற குடும்பப் பெண்களை மற்றும் பெற்றோர்களில் ஒருவர் இருக்கின்ற குடும்பப் பெண்களை சமூக பொருளாதாரரீதியில் வலுப்படுத்துவதற்கான கருத்திட்ட முன்மொழிவும், அவர்களை பொருளாதாரத்தின் பங்குதாரர்களாக்குதல். (இது சீரிய வேலை என்பதன் கீழான நிகழ்ச்சித்திட்டமாகும்).

3. SYIB பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் திணைக்களத்தின் அலுவலர்களை இயலுமையை அதிகரிப்பதற்காக நடத்தப்பட்டது.

4. கொரிய அரசாங்கத்தின் ஆதரவுடன் தொழில்வாய்ப்பு மற்றும் தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான கொள்கை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்.

04

# தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அலுவலகரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 06 ஆம் திகதி 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. இந்நிறுவகம், தொழில்தருநர்கள், மற்றும் அரச ஊழியர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தொழிற் சங்கங்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப்படுகின்றது.

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் தற்போது தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் கீழ் இயங்கி வருவதுடன் தொழில் திணைக்களம், ஏனைய அரசாங்க நிறுவனங்கள், பகுதியளவிலான அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை பேணி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறே தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் சர்வதேச தொழில் தாபனம் போன்ற சர்வதேச மட்டத்திலான நிறுவனங்களுடனும் செயற்படுகின்றது. இந்தியாவிலுள்ள வி.வி கிரி தேசிய தொழில் நிறுவகத்துடன் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொழில் சட்டவாக்கங்கள், ஒழுங்கு விதிகள் பற்றியும் அதேபோன்று பல்வேறு முகாமைத்துவ விடயப்பரப்புகள் தொடர்பிலும் அறிவைப் பெற்றுள்ள திறன்மிக்க பலம்வாய்ந்த ஊழியர் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் வழிநடத்துதல் போன்றவை இந்த நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

இந்த செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில், பின்வருகின்ற பிரதான பிரிவுகள் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தில் தொழிற்படுகின்றன.

அ) பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
ஆ) ஆராய்ச்சி,திட்டமிடல் மற்றும் வெளியீட்டுப் பிரிவு
இ) நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு

2017-01-01 இலிருந்து 2017-12-31 வரை நடத்தப்பட்ட முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிகழ்ச்சித் திட்டங்களின் விபரம் | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | எதிர்பார்த்த வருமானம் (ரூபா) | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பெற்ற வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|
| டிப்ளோமா பாடநெறி | 6 | 7,155,000 | 5 | 7,235,000 |
| ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம் | 52 | 3,120,000 | 51 | 3,721,050 |
| இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 40 | 4,800,000 | 40 | 5,182,700 |
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் | 12 | 1,920,000 | 10 | 1,449,000 |
| விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 3,840,000 | 23 | 2,420,100 |
| சான்றிதழ் பாடநெறி | 12 | 2,340,000 | 8 | 2,328,000 |
| நன்கொடை நிதியங்கள் | 3 | 1,500,000 | 0 | 0 |
| பயிற்சிப்பட்டறைகள் | 4 | 1,020,000 | 8 | 5,344,625 |
| பரீட்சைகளை நடத்துதல் | 5 | 200,000 | 18 | 1,666,000 |
| ஆய்வுக் கருத்திட்டங்கள் | 2 | 1,000,000 | 1 | 1,250,000 |

## 2017 ஆம் ஆண்டின் விசேட செயற்பாடுகள்

- ஐக்கிய நாடுகள் தாபனங்களின் ஒருங்கிணைப்புடன் "இலங்கையில் உழைக்கும் அணியில் பெண்களின் பங்கேற்பினைச் செம்மைப்படுத்துதல்" என்ற கருப்பொருளில் ஆய்வுகளை ஆரம்பித்தல்.

05

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஒன்றிணைந்தவொரு நிறுவகமாக உருவாக்கப்பட்டது. இந்த நிறுவகமானது, சரியான பாதுகாப்புக் கொள்கைகள், உத்திகளைப் பின்பற்றுவதன் மூலமும் சிறந்த சுகாதார, பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் தொழில்சார் விபத்துகள், நோய்களைத் தடுத்து ஒவ்வொருவருக்குமான சீரிய வேலைச் சூழலை உருவாக்குவதில் எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் அவர்களது நன்மை கருதி இவ்வாறான பயிற்சிகளினூடாகத் தேவையான கல்வியையும் வழங்குகின்றது.

கடந்த சில ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் அமைந்துள்ள பல தொழிற்சாலைகளின், உற்பத்தித் துறையிலிருக்கின்ற கைத்தொழில்கள், அதே போன்று பெருந்தோட்டத் துறையிலிருக்கின்ற கம்பனிகளின் ஒத்துழைப்புடன் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் வேலையாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டும் சேவைகளை உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு நிறுவகம் அர்ப்பணிப்புடன், ஈடுபாட்டுடன் பணியாற்றியுள்ளதுடன், இந்த ஆண்டு காலப்பகுதியில் அடையப்பெற்ற முன்னேற்றங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### தொலைநோக்கு

"அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல்"

### செயற்பணி

"வேலைத்தலத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் மற்றும் உற்பத்தித்திறனை செம்மைப்படுத்தும் பொருட்டு அனைத்து வகையான தொழில்வாய்ப்புத் தடைகளையும் தடுப்பதற்குரிய கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களையும் வலுப்படுத்துதல்"

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்பாடுகளும்

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்புளோமாக் கற்கைநெறிகள்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிகள்.
- பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் கற்கைநெறிகள்
- இயந்திரங்களுக்குக் கரியிடும் தொழிலாளர்களுக்கான பயிற்சி
- கைத்தொழில்கள் தொடர்பான தொழிற் கற்கைகள் நிகழ்ச்சித்திட்டம்
- கைத்தொழில் துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்
- மருத்துவமனைப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- அலுவலகப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- ஆய்வுகூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- இரசாயனங்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்
- உணவு நுகர்வோருக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- மனவழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## சூழலியல் கண்காணிப்பு சேவைகள்

- உள்ளகக் காற்றின் தரத்தை அளவிடுவதற்கு உள்ள வாயு தர உபகரணத்தையும் பல்வேறு வாயுக்களை கவனத்தில்கொண்டு அவற்றை அளவிடுவதற்கு 'புளு' வாயு பகுப்பாய்வு மாணியையும் பயன்படுத்துதல்.

- தொழிற்சாலையிலுள்ள உள்ள தூசி மட்டத்தைச் கண்காணிப்பதற்கு தூசி உறுஞ்சும் உபகரணத்தைப் பயன்படுத்துதல்.
- ஒலி மற்றும் சத்த மட்டத்தினைப் பரிசோதிப்பதற்கு ஒலி மட்ட மாணியைப் பயன்படுத்துதல்.
- அதியுயர் வெப்ப மட்டத்தைப் பரிசோதிப்பதற்கு வெப்ப அழுத்த மாணியைப் பயன்படுத்துதல்.

### மருத்துவ பரிசோதனைகள்

- கேட்கின்ற ஆற்றல் பற்றிய சோதனை
- பார்க்கும் திறன் பற்றிய சோதனை
- இரத்தப் பரிசோதனை
- தொழில் புரிவதற்கான தகுதியை மதிப்பிடுவதற்கான பரிசோதனை
- நுரையீரல் தொழிற்பாடு பற்றிய சோதனை

## தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் இடைநேர் முகாமைத்துவ, நிருவாக சேவைகள்

2017.01.01 இலிருந்து 2017.09.30 வரை தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதி,பௌதீக முன்னேற்றம்

| | நடத்தப்பட்ட பாடநெறிகள் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூபா மில்.) |
|---|---|---|---|---|
| 1 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்புளோமா பாடநெறி | 03 | 133 | 12.82 |
| 2 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 05 | 190 | 8.83 |
| 3 | நிருமணத் துறையினருக்கான இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 35 | 0.262 |
| 4 | கழிவு முகாமைத்துவம் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 11 | 0.055 |
| 5 | கொதிகலன் பாதுகாப்புப் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 16 | 0.064 |
| 6 | தாதிமாருக்கான ஒருநாள் பயிற்சிப் பாடநெறி | 01 | 18 | 0.630 |
| 7 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி ஆடைத் துறைக்கான இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 25 | 0.187 |
| 8 | பாதுகாப்பற்ற, தீங்கிளைக்கக்கூடிய இடங்கள் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 85 | 0.297 |
| 9 | இனங்காணப்பட்ட வரையறுக்கப்பட்ட இடங்கள் மற்றும் ஆபத்துக்கள் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 30 | 0.030 |
| 10 | மேற்பார்வையாளர்களுக்கான ஒரு நாள் பாதுகாப்புப் பயிற்சிப்பட்டறை | 01 | 12 | 0.042 |
| 11 | முதலுதவி பற்றிய மூன்று நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 12 | 0.126 |
| 12 | நிருமாணத் துறையினருக்கான மூன்று நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 09 | 0.094 |
| 13 | மின்சார பாதுகாப்பு இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 22 | 0.165 |
| 14 | இரசாயனப் பொருட்களின் பாதுகாப்பான பயன்பாடு பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 13 | 0.065 |
| 15 | OSHAS 8001/ 8002 தருங்கள் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 14 | 0.070 |

## விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ கிளினுக்குகள்

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், மருத்துவ வசதி ஏற்பாடுகளுக்காக ஐந்து மருத்துவ கிளினிக் முகாம்கள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டமானது,

இரத்தினபுரி, பதகேதர, மாரப்பணை, பல்மதுளை மற்றும் கஹவத்தை ஆகிய இடங்களை உள்ளடக்கிய அரசாங்க மருத்துவ ஒன்றியத்துடன் இணைந்து நடத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, தொழில் தொடர்பான விபத்துக்களில் உறுப்புக்களை இழக்கின்றவர்களை மீள ஒன்றுபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம். யப்பான் மொழி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பயிற்சி வழங்குநர்களுக்கு பயிற்சியளிக்கின்ற நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமாக் கற்கைநெறி**
இந்தப் பாடநெறி கோட்பாட்டு மற்றும் செய்முறை அறிவினை வழங்குவதுடன், இந்தப் பாடநெறியின் சிறப்புப் பண்பு பங்குபற்றுநர்கள் இரண்டு கள விஜயங்களில் ஈடுபடுவதாகும். பாதுகாப்பான வேலைத்தளங்களை உருவாக்குவதற்கு பாடநெறி இயலச்செய்கின்ற பங்குபற்றுநர்களினால் பயிற்சி வழங்கப்படுவதுடன், இது மறுவகையில் அனைத்து வேலையாளர்களினதும் பாதுகாப்பினை அதிகரிக்கச் செய்கின்றது. எமது நிறுவகம், தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களாக பல துறைகளுக்கு மதிப்பிட முடியாத சேவையை வழங்கக்கூடிய ஆட்களையும் உருவாக்குகின்றது. இது, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு மேலதிக தகைமையாக விளங்குவதுடன், ஏற்கனவே எண்ணிக்கையிலான மாணவர்கள் பல வெளிநாடுகளில் வேலைகளைப் பெற்றுள்ளனர்.

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி**
அனைத்துப் பாடநெறிகளிலும் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 190 என்பதுடன், அவர்கள் அனைவரும் வெற்றிகரமாக நிறைவு செய்திருந்தனர். இந்த பயிற்சி அவர்களது வேலைத் தளங்களில் தொழில்சார் விபத்துக்களைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளது. இந்தப் பாடநெறியினைப் பின்பற்றியவர்கள் தற்போது பாதுகாப்பு அலுவலர்களாக பணிக்கமர்த்தப் பட்டுள்ளார்கள். கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் சித்தியடைந்த ஒருவரும், அவர் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் ஆர்வம் இருப்பவருமாக இருந்தால் இதனைப் பின்பற்ற முடியும். குறிப்பிடத்தக்க பண்பு என்னவெனில் பாதுகாப்புத் துறையிலிருந்து சிரேஷ்ட அலுவலர்களும் பங்குபற்றுகின்றனர்.

**தாதியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 2017 பெப்ரவரி 28**
தாதியர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை 2017 பெப்ரவரி 28 ஆம் திகதி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை பயனுறுதிவாய்ந்த முறையில் கையாளுகின்ற நிறுவனமொன்று என்ற தரத்தைப் பெறுகின்றது.இந்தப் பாடநெறி,விசேடமாக,சுகாதார துறையில் நோயாளிகளைப் பராமரிக்கின்ற தொழிற்றுறையாளர்களுக்காக வடிவமைக்கப்படுகின்றது.

**பயிற்றுவிப்பவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - மட்டக்கிளப்பு மற்றும் வவுனியா**
இந்த நிகழ்ச்சித்திட்டமானது, சர்வதேச தொழில் தாபனத்தின் ஒருங்கிணைப்புடன் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஒருங்கமைக்கப்பட்டிருந்தது.தேசிய தொழிலாளர் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களின் தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து 50 பயிலுநர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். சர்வதேச தொழில் தாபனம் மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் நடத்தப்படுகின்ற இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2.29 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளதுடன், 10 நாட்களாக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் பிரதானமாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சியினை மையப்படுத்தியாக இருந்திருந்தது.

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்

வேலைத் தளங்களில் பணியாளர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும் குறிக்கோளுடன் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்தை பணியாளர்களின் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரமாக அமைச்சரவை குறித்தொதுக்கியுள்ளது.

2017 ஒக்டோபர் 11

| நிகழ்ச்சித்திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா) | பௌதிக முன்னேற்றம் (ரூபா) | நிதிசார் முன்னேற்றம் (ரூபா) |
|---|---|---|---|
| தேசிய தொழில்சார் பாதகாப்பு மாநாடு | 400*5000 = 2,000,000.00 | 422*5000<br>நினைவுச்சின்னம் - பணம் அனுசரணையாளர்களிடமிருந்து பெறப்பட்டது | 2,110,000.00<br>355,000.00<br>2, 300,000.00 |

மாநாட்டில் 75 பங்குபற்றுநர்கள் பங்குபற்றியிருந்தனர். விரவுரைகள் உள்நாட்டு, வெளிநாட்டு வளஆளர்களால் வழங்கப்பட்டிருந்தது.

## குறிக்கோள்கள்

இந்த ஆண்டின் தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரம் 09 ஒக்டோபர் முதல் 13 ஒக்டோபர் வரை நடைபெறவுள்ளதுடன். இந்த வாரத்தைக் குறிக்குமுகமாக பின்வருகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. பாடசாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கருத்தரங்கு - 2017 ஒக்டோபர் 09 - ஸ்ரீ பிரியரத்ன விதிதியாலயம், பாதுக்க.

இதன்படி,இது தொடர்பான பிரதான பயிற்சிப்பட்டறை மற்றும் கருத்தரங்கு 2017 ஒக்டோபர் 09 ஆம் திகதி பாதுக்க பிரியரத்ன மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய இலக்கு, குறிக்கோள், தொழில்சார் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்கள் அறிவினைப் பெற்றுக் கொள்வதும் அதிகரிப்பதும் அத்துடன் இதுதொடர்பான செய்முறையப் பயிற்சியை வழங்குவதுமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியின் தலைமையில், கல்வி வலயப் பணிப்பாளர், ஸ்ரீ பிரியரத்ன மத்திய கல்லூரி அதிபர் மற்றும் 100 பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்து.

2. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய கரத்தரங்கு- 2017 ஒக்டோபர் 11- கிங்ஸ்பேறிய் ஹோட்டல்.

இந்த கருத்தரங்கு 2017 ஒக்டோபர் 11 ஆம் திகதி மு.ப.9.00 மணியிலிருந்து கிங்ஸ்பேறிய் ஹோட்டலில் 500 பங்குபற்றுநர்களுடன் நடத்தப்பட்டிருந்தது. கருத்தரங்கின் கருப்பொருள் தொழில்சார் விபத்துக்களைத் தடுத்தல் என்பதாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம், வேலையாளர்களின் பாதுகாப்பு மற்றும் காப்பினை நிச்சயப்படுத்துவதற்கு ஏனைய நாடுகளில் புதிய தொழில்நுட்பங்களையும், புதிய முறைமைகளையும் பயன்படுத்துவது தொடர்பில் பங்குபற்றுநர்களுக்கிடையில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும், அறிவினை ஊட்டுவதுமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம், ஆறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வள ஆளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது. இதில் 500 பாதுகாப்பு அலவலர்கள் சமூகமளித்திருந்தனர்.

### நோயினைக் கண்டறியும் முகாம் - ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

சிரம வாசனா நிதியம் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட மருத்துவ கிளினிக் பின்வருகின்ற ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் நடத்தப்பட்டன.

- அவிசாவெலஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்
- கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்
- கட்டுநாயகஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

இந்த மருத்துவ முகாம்களில் பின்வருகின்ற பரிசோதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது

- மருத்துவப் பரிசோதனை
- நுரையீரல் பரிசோதனை
- இரத்தப் பரிசோதனை
- காதுப் பரிசோதனை

மூன்று ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திலிருந்து பாரிய எண்ணிக்கையிலான பணியாளர்கள் இந்த முகாம்களில் பங்குபற்றியிருந்ததுடன், விபரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| தொடர் இல. | பரிசோதனை | அவிசாவெல - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | கொக்கல - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | கட்டுநாயக - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | மருத்துவப் பரிசோதனை | 151 | 137 | 371 |
| | இரத்தப் பரிசோதனை | 151 | 107 | 188 |
| | நுரையீரல் பரிசோதனை | 75 | 88 | 106 |
| | காதுப் பரிசோதனை | 61 | 77 | 75 |

06

# வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தளத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது. வேலையாளர் நட்ட ஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதவானின் தத்துவம் மற்றும் நீதிவான் நீதிமன்ற தத்துவத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நீதித்துறை அலுவலர்களான வேலையாளர் நட்ட ஈட்டுஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையாளர்கள் மற்றும் பிரதி ஆணையாளர்கள், நட்டஈட்டு ஆணையாளர்கள் ஆகிய 3 பதவிகளும் இலங்கையின் கணக்காளர் சேவையின் தரம் I இனைச் சேர்ந்த பதவி ஒன்றும் இலங்கை நிருவாக சேவையின் பதவியொன்றும் உள்ளடங்கலாக 43 பதவிகள் இதில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகம் வழக்குகள் பிரிவு, தாபனப் பிரிவு, கணக்குகள் பிரிவு, சிறுவயது நட்டயீட்டு அலுவல்கள் மற்றும் காப்புறுதி உரிமப்பத்திரப் பிரிவு போன்றவற்றை உள்ளடக்கிய உள்ளது.

வேலையாளர் நட்ட ஈட்டுநீதிமன்ற செயல்முறைக்கு குற்றவியல் வழக்குக் கோவை, சிவில் வழக்குக் கோவை மற்றும் சாட்சிய கட்டளைச் சட்டம் ஏற்புடையதானவை என்பதுடன், மேன்முறையீட்டு நடவடிக்கை முறையானது மாவட்ட நீதிமன்றத்திற்கு சமமானதாகும்.

## பிரதான செயற்பாடுகள

- தொழில்புரிகையில் விபத்திற்குட்பட்ட வேலையாளர்களுக்கு
- தொழிலின் தன்மையினால் நோயுற்ற வேலையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல்
- தொழில் புரிகையில் ஏற்பட்ட விபத்தினால் மரணம் ஏற்படின்

## பிரதான குறிக்கோள்கள்

வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இடம்பெறுகின்ற விபத்துக்களில் காயமடைகின்ற வேலையாளர்களுக்கு, தொழிலின் தன்மைக்கு அமைய ஏற்படக்கூடிய நோய்களினால் பாதிக்கப்படுகின்ற வேலையாளர்களுக்கு மற்றும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இடம்பெறுகின்ற விபத்துக்களினால் உயிரிழக்கின்ற வேலையாளர்களில் தங்கி வாழ்வோருக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுத்தல்.

1934 ஆம் அண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரிடம் உரித்தளிக்கப்பட்டுள்ள பிரதான தத்துவங்கள் மற்றும் கடமைகள்.

1. அரச துறை மற்றும் தனியார் தறையில் தொழில் புரிகையில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவ துடன் தொடர்புட்ட செயற்பாடுகள் மற்றும் வேலையாளரொருவரின் இறப்பின்போது அவரில் தங்கியிருப்பவர். (இறுதித் தீருத்தத்தின்படி, செலுத்தக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடு 55,000/- ஆகும்)
2. இறந்த பணியாளர்களில் தங்கியிருக்கின்ற பராயமடையாதவர்களது நட்டஈட்டை அவர்கள் முதிர்ச்சியடையும் வரையில் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பிலிட்டு அதனைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
3. நட்டஈட்டுக் கொடுப்பனவைச் தெழில்தருநர்கள் செலுத்தாத சந்தர்ப்பங்களில், அத்தகைய தொழில்தருநர்களது அசையும், அசையாத சொத்துக்களைக் கைப்பற்றி, நட்டஈட்டினை அறவிடுவதற்காக அவற்றை பொது ஏலத்தில் விடுதல்.
4. வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல்.
5. பணியாளரொருவருக்கு விபத்தொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பரிசோதனைகளை நடத்துதல்.
6. இலங்கையில் பதிவுசெய்து கப்பலில் மற்றும் விமானத்தில் பணியாற்றுகின்ற வேயையாளர்களுக்கு இலங்கைக்கு வெளியே விபத்துக்கள் ஏற்படுகின்றவிடத்து நட்டஈட்டினை அறவிடுவதனை மேற்கொள்ளுதல்.

**2017.01.01 இலிருந்து 2017.12.31 வரையான முன்னேற்றம் (நீதிமன்றங்கள் தொடர்பான விடயங்கள்)**

| தொழிற்பாடுகள் | 2017.01.01 - 2017.12.31 |
|---|---|
| தொழில்தருநர்களினால் முறையாக அறிக்கை செய்யப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை | 485 |
| விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 3008 |
| இறுதிக் கட்டச் செயற்பாடுகளுக்கான நட்டஈட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 426 |
| பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 125 |
| உயிராபத்தை ஏற்படுத்தும் விபத்துக்களுக்கெதிராக நட்டஈடாக அறவிடப்பட்ட தொகை (ரூபா.) | 111,276,358.99 |
| நீதிமன்றங்களின் ஆணைப்படி அல்லது தன்னார்வ அடிப்படையில் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களுக்காக தொழில்தருநர்களினால் வேலையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை (ரூபா.) | 36,009,234.68 |
| பதிவுசெய்யப்பட்ட உடன்படிக்கைகளின்படி இறப்பை ஏற்படுத்தாத விபத்துக்கள் காரணமாக பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை (ரூபா.) | 9,854,327.11 |
| உயிராபத்தை விளைவிக்கும் விபத்துக்கள் தொடர்பில் அறிவிடப்பட்டதன் பின்னர் பராயமடையாத தங்கியிருப்போர் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணத் தொகை (ரூபா.) | 27,884,973.00 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 148 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகள் அவர்கள் 18 வயதினை அடைந்ததும் மூடப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 216 |
| செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (ரூபா.) | 16,850,651.81 |

**2017.01.01 இலிருந்து 2017.12.31 வரையான நிதிசார் முன்னேற்றம்**

| விபரம் | 2017 ஆம் ஆண்டின் ஏற்பாடு (ரூபா மில்லியன்) | 2017 ஜனவரி 01 டிசெம்பர் 31 வரையான செலவினம் (ரூபா மில்லியன்) | மீதி (ரூபா மில்லியன்) | செலவின் விகிதம் |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 29,388,000 | 28,871,447 | 516,553 | 98.24 |
| மூலதனச் செலவினம் | 1,265,000 | 1,096,427 | 168,572 | 86.67 |
| மொத்த செலவினம் | 30,653,000 | 29,967,874 | 685,125 | 97.76 |

06

# சிரம வாசனா நிதியம்

சிரம வாசனா நிதியமானது, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சபைச்சட்டத்தின் கீழ் பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதற்காக தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்றதொரு நிறுவனமாகத் தாபிக்கப்பட்டிருந்தது. சட்டத்தில் வரையப்பட்டுள்ள சபையின் 06 குறிக்கோள்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக எண்ணிக்கையிலான சேமநலன் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

“சிரம வாசனா நிதியத்தின்” நிதியின் பிரதான மூலம் தேசிய லொத்தர் சபையின் ‘ஜாதிக்க சம்பத லொத்தர்’ ஆகும். ஜாதிக்க சம்பத லொத்தர் விற்பனை அதிகரித்ததுடன், பணியாளர்களின் சேமநலனுக்கான விரிவான சேவை ஏற்பாட்டினை இயலச்செய்து பரந்துபட்ட வளர்ச்சியொன்றினை, சாட்சியியை நிதியம் கொண்டிருக்கின்றது.

## சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்கள்

(அ) வேலையாளர்களுக்கான சேமநலனை மேம்படுத்துதல்.

(ஆ) பணியாளர்களுக்கு முன்னறிவித்தல் வழங்கப்படாது வேலைத்தளங்கள் மூடப்படுகின்றபோது அவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

(இ) அவசரகாலத்தின்போது மருத்துவ வசதிகள் மற்றும் ஏனைய உதவிகளை பணியாளர்களுக் வழங்குதல்.

(ஈ) பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுகின்றபோது பணியாளர்களுக்கு தற்காலிக நிவாரணங்களை வழங்குதல்.

(உ) பணியாளர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்போருக்கு வயோதிப காலத்தில் நிதி உதவிகள் மற்றும் ஏனைய வடிவிலான உதவிகளை வழங்குதல்.

(ஊ) வேலையாளர்களின் சேமநலனுக்கு அதிகளவிலான பங்களிப்பினை நல்கியவர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

## சிரம வாசனா நிதியத்தின் பெறுகைகள்

- நிதியத்தின் குறிக்கோள்களை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பாராளுமன்றத்தினால் காலத்திற்கு காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அனைத்து பணத் தொகைகளும்.
- உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்தான மானியங்கள், அன்பளிப்புகள்அல்லது நன்கொடைகள்.
- நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து வருமானமாகப் பெறப்பட்ட அனைத்துப் பணத் தொகைகள்.
- இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு லொத்தர்களின் நடைமுறைகள் உள்ளடங்கலாக இந்தச்சட்டத்தின் கீழ்,நிதியத்தின் தத்துவங்களின் பிரயோகத்தால், அதன் தொழிற்பாடுகளை உறுவதால் நிதியத்தினால் உண்டாக்கப்படுகின்ற அனைத்துப் பணத் தொகைகள்.

நிதியமானது, தனியார் துறை பணியாளர்களை உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்டது ஆனால் சுயதொழிலில் ஈடுபடுகின்றவர்களை உள்ளடக்கவில்லை. சிரம வாசனா நிதியத்தின் நிதி இயலுமையின் அடிப்படையில் வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. நிலையான நிதி அதிகரிப்புடன், பாரம்பரிய வேலை செயற் பரப்பெல்லைக்கு அப்பால் 2012 ஆம் ஆண்டில் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டிருந்தன.

## சிரம வாசனா நிதியம்

| நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | | 2017 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2017.01.01 - 2017.12.31 வரையான எதிர்பார்க்கப்பட்டஇலக்குகள | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி | பௌதீகம் | நிதி |
| 1 | மருத்துவ கிளினிக் மற்றும் முகாம் | 8 | 4 | 8 | 2.2 |
| 2 | வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 8 | 4 | 8 | 3.4 |
| 3 | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 28 | 1.5 | 22 | 0.4 |
| 4 | நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் | 10 | 12 | 30 | 11.7 |
| 5 | செயற்கை கால்களை வழங்குதல் | 42 | 3 | 1 | 0.18 |
| 6 | வாழ்க்கைத் தொழில் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 12 | 0.6 | 1 | 0.03 |
| 7 | தொழில்சார் பாதுகாப்பு மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 28 | 1 | 23 | 0.4 |
| 8 | சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டம் | 25 | 0.75 | 11 | 0.4 |
| 9 | மருத்துவ நிவாரணம் | 10 | 0.5 | 3 | 0.1 |
| 10 | புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் | 100 | 7 | 74 | 4.6 |
| 11 | இயற்கை அனர்த்தம் மீதான நிகழ்ச்சித்திட்டம் | 4 | 6 | 8 | 4 |
| 12 | விருது வழங்கல் வைபவம் | 50 | 2.5 | 33 | 0.28 |
| 13 | ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 12 | 1 | 9 | 0.9 |
| 14 | விளம்பரப்படுத்தல்கள் மற்றும் பிரபல்யப்படுத்-தல் | 30 | 3.5 | 29 | 1.5 |

## அமைச்சின் விசேட செயற்பாடுகள் சில



காலியில் சனாதிபதி நடமாடும் சேவையில் சிரம வாசனா நிதியத்தினால் நடத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் - 14.01.2017




மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் ஹேலியலவில் நடத்தப்பட்ட தொழில் சந்தை - 18.20.2017




தொழில் சட்ட மற்றும் செய்முறைகள் பற்றிய தேசிய கருத்தரங்கு - 30.11.2017



தொழில் திணைக்களத்திற்கு 191 தொழில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டமை - 01.12.2017



கொரிய மனிதவலு திணைக்கள அலுவலர்களுடனான கூட்டம் - 14.10.2017




சர்வதேச மகளீர் தினத்தைக் குறிக்குமுகமாக காலியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 08.03.2017



இரத்தினபுரியில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்பட்ட மருத்துவ முகாம் - 31.03.2017



பொலநறுவையில் சனாதிபதி நடமாடும் சேவையில் சிரம வாசனா நிதியத்தினால் நடத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் - 11.03.2017



மீதோற்றமுல்லை நிகழ்வினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சிரம வாசனா நிதியத்தினால் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுதல் - 25.07.2017



தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற அணி உருவாக்கம் பற்றிய பயிற்சிப்பட்டறை



தேசிய தொழில் அலோசனைச் சபைக் கூட்டம் 22.11.2017




தொழில் திணைக்களத்தினால் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கு - 10.10.2017

## කම්කරු, වෘත්තීය සමිති සබඳතා හා සබරගමුව සංවර්ධන අමාත්‍යාංශය
## தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு
## Ministry of Labour, Trade Union Relations and Sabaragamuwa Development

**ශ්‍රී ලංකාවේ අර්ධ රාජ්‍ය හා පෞද්ගලික අංශයේ සේවයේ නියුක්ත වූවන්ගේ ජීවන හා සේවා තත්ත්වයන් වර්ධනය කිරීම මෙන්ම රටේ නිෂ්පාදනය හා ශ්‍රම ඵලදායිතාව ඉහළ නැංවීමට අවශ්‍ය වන කාර්මික සාමය සහ සේව්‍ය-සේවක සබඳතාව ස්ථාපනය කරමින් අදාළ ප්‍රතිපත්ති සම්පාදනය කිරීම සහ ඒවා ක්‍රියාවට නැංවීම, කම්කරු, වෘත්තීය සමිති සබඳතා හා සබරගමුව සංවර්ධන අමාත්‍යාංශයේ මූලික පරමාර්ථ වේ. සේවක ජනතාවගේ සුබසාධනය උදෙසා වරින්වර ඇති කරන ලද කම්කරු නීති හා අණපනත් අනුව මෙම අමාත්‍යාංශයට පැවරෙන කාර්ය භාරයද පුළුල්ය.**

இலங்கையில் நியதிச் சபைகள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற அண்ணளவாக 8.5 மில்லியன் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் தொழில் தரங்களை அதிகரித்தல் உட்பட தேசியஉற்பத்தி மற்றும் தொழில் உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்குத் தேவையான தொழில் அமைதி, தொழில்வழங்குநர் - தொழிலாளரிடையேயான உறவுகளை உருவாக்கி குறித்த கொள்கைகளைத் தயாரித்தல், அவற்றை அமுலாக்குதல் போன்றவை தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் பிரதான குறிக்கோள்களாகும். தொழிலாளர்களின் நலன்களை முன்னிட்டு அடிக்கடி உருவாக்கிக்கொண்ட தொழிற்சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கேற்ப இந்த அமைச்சிற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள கடமைகளும் விரிவானதாகும்.

Main objectives of the Ministry of Labour, Trade Union Relations and Sabaragamuwa Development are formulation of policies and implement those policies that establish the industrial peace and employer and employee relationship, which are pre-requisites for the increase of the production and the labour productivity, with the view of improving the quality of life and service conditions of the working population of about 8.5 million, who are employed in the private and semi-government sector of Sri Lanka. The functional area entrusted to this ministry gets broadened along with labour laws and legislations that are formed from time to time, for the welfare of the working people.


**තැ. පෙ. 1519, දෙවන මහල, කම්කරු මහලේකම් කාර්යාලය, නාරාහේන්පිට, කොළඹ 05.**
த. பெ. 1519, 2 ஆவது தளம், தொழில் செயலகம், நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.
**P. O. Box 1519, 2nd Floor, Labour Secretariat, Narahenpita, Colombo 05.**


PRINTEC | 0112 815 816